Registered as a news paper.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஜுலை 9, 10, 11,- 2004 [வெள்ளி, சனி, ஞாயிறு]
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 19 (08.07.2004) வியாழக்கிழமை இதழ்:279



உயிரிழந்த பெண்ணின் தலையை மீட்கும் அதிரடிப்படைச் சிப்பாய்



கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு வெளியே கடும் பாதுகாப்பு



காயமுற்ற பொலிஸார் ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# கொள்ளுப்பிட்டியில் குண்டுவெடிப்பு; நான்கு பொலிஸார் உட்பட ஐவர் பலி!

## சந்தேகத்திற்கிடமான பெண்ணை சோதனையிட்டபோது சம்பவம்




(கொழும்பு)

**ஈ.பி.டி.பி செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கச் சென்றபோது சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண்ணை – கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சோதனையிட்ட போது இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 4 பொலிஸார் உட்பட 5 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 12 பேர் காயமடைந்தனர்.**

**நேற்று நண்பகல் 12.16 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது –**

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகை மற்றும் பிரிட்டிஷ் தூதரகம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமான கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் அமைந்துள்ளது.

இரண்டாவது மாடியிலுள்ள இந்த அலுவலகத்திற்கு நேற்றுக் காலை 10 மணியளவில் இன்னொரு பெண்ணுடன் வந்த இளம் பெண் ஒருவர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இவருக்கு அமைச்சரைச் சந்திப்பதற்கான காரணம் அடங்கிய படிவம் வழங்கப்பட்டது. அதை அவர் பூரணப்படுத்தி அதிகாரிக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் பலியான பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவராம்

### பொலிஸ் அதிகாரி தகவல்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தியாகராஜா - ஜெயராணி என்ற பெயருடைய இந்தப் பெண் 1978 ஆம் ஆண்டு பிறந்தவராவார். இவர் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே கொழும்பிற்கு வந்து தங்கியுள்ளார்.

குண்டுடன் வந்த இந்தப் பெண்ணை ஓட்டோ ஒன்றில் வந்த ஒருவரே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு முன்பாக இறக்கி விட்டுச் சென்றார். இவருடன் இன்னொரு பெண்ணும் வந்திருந்தார்.

விசேட பொலிஸ் குழுவினர் கைதுசெய்த இந்தப் பெண் மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத்துறை பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறார்.

என்று அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## புதிய முறையில் தயாரித்த குண்டே கொள்ளுப்பிட்டியில் வெடித்ததாம்!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தினுள் குண்டை வெடிக்கவைத்து உயிரிழந்த பெண் அணிந்திருந்த தற்கொலைத் தாக்குதல் அங்கி இதுவரை பயன்படுத்தப்பட்ட அங்கிகளை விட வித்தியாசமானதாக நுட்பமான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்று உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறிப்பிட்ட பெண் அணிந்திருந்ததாக கருதப்படும் தற்கொலைத் தாக்குதல் அங்கி நைலோன் துணியால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் நிழல் யுத்தம் பாலசிங்கம் கடும் கண்டனம்!

### சொல்ஹெய்ம் மூலம் தெரியப்படுத்தினர்

(லண்டன்)

பாதுகாப்பு அமைச்சை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அரசபடையினரின் போர் நிறுத்த மீறல்களை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது -

அவரால் சமாதான முயற்சிகளை உண்மையாக முன்னெடுத்துச் செல்லமுடியாதென்பதையே எடுத்துக் காட்டுவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் விசனம் தெரிவித்தார்.

சமகால அசியல் நிலைமை குறித்து நேற்று முன்தினம் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு குண்டு வெடிப்பு சமாதானத்தை பாதிக்காது

### ஐ.ரி.என். பேட்டியில் சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சமாதானமுயற்சிகளை பாதிக்காது என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றிரவு ஐ.ரி.என்னுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான்கு வருடங்களுக்கு பிறகு இந்தக் குண்டுவெடிப்பு கொழும்பில் நிகழ்ந்துள்ளது. சி.வி.குணரட்ணவை 2000 ஆம் ஆண்டு கொலை செய்தபின்னர் கொழும்பில் நடந்த முதலாவது குண்வெடிப்பு இதுவாகும்.

இது மிகவும் கவலைக்குரிய சம்பவமாகும். அரசும் இது தொடர்பாக செய்தியறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதனை விடுதலைப் புலிகள் செய்திருந்தால் அது போர்நிறுத்தத்தை மீறும் ஒருசெயலாகும். ஆனால் அதற்குமுன் அரசு மாறிய பின் போர்நிறுத்த ஒப்பந்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து அமைச்சரும் ஈ.பி.டி.பி செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இது குறித்து பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில், அமைச்சர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மேலும் அதிகாரிகள் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பாதுகாப்புக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை!

(கொழும்பு)

நேற்று நண்பகல் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும கருத்து வெளியிடுகையில்-

கொழும்பு ச..டளை தலைமையகமே கொழும்பின் பாதுகாப்பை பேணிவருகிறது. அவர்கள் பாதுகாப்பு செயற்பாடுகளை நேற்று முதல் அதிகரித்துள்ளனர்.

குறிப்பாக வாகனங்கள், பொது மக்கள் போன்றவற்றின் மீதான சோதனைகள் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வீதித்தடைகள் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்புக்குமிடையே இடம்பெற்ற யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் கொழும்பில் இடம்பெற்ற முத

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். கோட்ட மட்ட தமிழ் மொழித்தின முடிவுகள்

யாழ். கோட்டமட்ட பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று இடத்தைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு-

## பிரிவு - 1 - தரம் 4,5

### வாசிப்பு

இ. கஜானன் - முதலாமிடம் (யா/ சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), இ.சிந்துஜா - இரண்டாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கி.மரினோ விஜிதரன் - மூன்றாமிடம் (யா/சென். ஜோனஸ் கல்லூரி).

### ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல்

க. ஏஞ்சலின் விதுஷா - முதலாமிடம (யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), இ. கீத்தனன் இரண்டாமிடம் (யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), உ.பமிதா - மூன்றாமிடம் (யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

### பேச்சு

க.சாரங்கி - முதலாமிடம் (யா/ சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), இ.மயூரி - இரண்டாமிடம் (யா/புனித மரியாள் வித்தியாலயம்), து.டார்வினா - மூன்றாமிடம் (யா/ பாஷையூர் அன்ரனிஸ் வித்தியாலயம்).

### பாவோதல்

டோ. அ.ஜெரின்சியா - முதலாமிடம் (யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ம.நீலுகா - இரண்டாமிடம் (யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), நீ. யோசவ்வாஸ் - மூன்றாமிடம் (யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி).

### இசையும் அசைவும்

ச. அஜந்தினி - முதலாமிடம் (யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), பா.கோ.ஜப்பிரியன் - இரண்டாமிடம் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), க.நாராயணி - மூன்றாமிடம் (யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்).

### நடனம் - தனி

செ.சுவேதா - முதலாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கு. வைஷ்ணவி - இரண்டாமிடம் (யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), இ.றஜேந்தினி - மூன்றாமிடம் (யா/ புனித மரியாள் வித்தியாலயம்).

## பிரிவு - 2 - தரம் 6,7

### வாசிப்பு

மு.சோபிகா - முதலாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆ.சஞ்ஞயன் - இரண்டாமிடம் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), ச.ஜோ.சஞ்சுதன் - மூன்றாமிடம் (யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி.

### பேச்சு

யோ. நிருஜா - முதலாமிடம் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), கி.லுக்சிகா - இரண்டாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சி.கனுஷன் - மூன்றாமிடம் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி).

### பாவோதல்

ச.நிஷா - முதலாமிடம் (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ம.ரிஷாந்தினி - இரண்டாமிடம் (யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), தி. காயத்திரி - மூன்றாமிடம் (யா/புனித மரியாள் வித்தியாலயம்).

### இசை - தனி

இ.சந்திரிகா - முதலாமிடம் (யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), போ.டிஸ்ஸானி - இரண்டாமிடம் (யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), உ.பரணிகா - மூன்றாமிடம் (யா/வேம்படி மகளிர் கல்லூரி).

### நடனம் - தனி

ஜே.பிரியவதனி - முதலாமிடம் (யா/வேம்படி மகளிர் கல்லூரி), சு.மகிழினி - இரண்டாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ந.சபீனா - மூன்றாமிடம் (யா/ திருகுடும்ப கன்னியர் மடம்).

## பிரிவு - 3 - தரம்8,9

### பேச்சு

ப.உபேந்திரா - முதலாமிடம் (யா/யாழ். மத்திய கல்லூரி), அ.அருந்ததி - இரண்டாமிடம் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ஆன்.டி. லைலா சாம்சன் லூர்திஸ் - மூன்றாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

### பாவோதல்

எ.பி.கிருபாளினி - முதலாமிடம் (யா/திருகு டும்ப கன்னியர்மடம்), வ.நிரோஜன் - இரண்டா மிடம் (யா/ யாழ். மத்திய கல்லூரி), ஜெ.ஜெக உஷாந்தி - மூன் றாமிடம் (யா/ புனித மரியாள் வித்தியாலயம்.

### இசை - தனி

லோ.

தனப்பிரியா - முதலாமிடம் (யா/ சுண் டுக்குளி மகளிர் கல்லூரி), ச.ஜெயதரணி - இரண் டாமிடம் (யா/ கொழும்புத்துறை இந்து மகா வித் தியாலயம்), செ.மதுரிகா - மூன்றாமிடம் (யா/ வேம் படி மகளிர் கல்லூரி).

### நடனம் - தனி

கு.துவாறகா - முதலாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரு. ஹம்சத்வனி - இரண்டாமிடம் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), ஞா.ஜெயலக்சுமி - மூன்றாமிடம் (யா/ திருகுடும்ப கன்னியர் மடம்).

## பிரிவு -4 - தரம் 10,11

### பேச்சு

க.விஜயராஜ் - முதலாமிடம் (யா/யாழ். மத்திய கல்லூரி), வே.பிரணவன் - இரண்டாமிடம் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), அ.ஞா.பிரிட்டோ - மூன்றாமிடம் (யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி).

### பாவோதல்

ஞா. தர்சினி - முதலாமிடம் (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), மே.லதாங்கி - இரண்டாமிடம் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), சு. மடோனா கஷந்தி - மூன்றாமிடம் (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

### இசை - தனி

க. அன்ரனி பாலா - முதலாமிடம் (யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி), சி.சிவதர்சிகா - இரண்டாமிடம் (யா/ புனித மரியாள் வித்தியாலயம்), லோ.ஷயானி - மூன்றாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

### நடனம் - தனி

ந.சாளினி - முதலாமிடம் (யா/ வேம்படி மக ளிர் கல்லூரி), சி.கா[illegible] இரண்டாமிடம் (யா/ சுண் டுக்குளி மகளிர் கல்லூரி), பா.தய[illegible]ளினி - மூன்றா மிடம் (யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்).

## பிரிவு - 5 - தரம் 12, 13

### பேச்சு

தெ.ஹர்சன் - முதலாமிடம் (யா/ யாழ். மத்திய கல்லூரி), தி. கணதீபன் - இரண்டாமிடம் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), ம.மயூரா - மூன்றாமிடம் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி).

### பாவோதல்

சு.சசீவன் - முதலாமிடம் (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), கா.ஜங்கரி - இரண்டாமிடம் (யா/வேம் படி மகளிர் கல்லூரி), ஏ.தயானி - மூன்றாமிடம் (யா/ சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்).

### இசை - தனி

போ. சுதாஜினி - முதலாமிடம் (யா/ வேம்படி மக ளிர் கல்லூரி), தே.டஷிகா - இரண்டாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ப.சிவமைந்தன் - மூன்றாமிடம் (யா/ யாழ். மத்திய கல்லூரி).

### நடனம் - தனி

கு. காயத்திரி - முதலாமிடம் (யா/ வேம்படி மக ளிர் கல்லூரி), எ.பி. தர்மினி - இரண்டாமிடம் (யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்).

## குழு நிகழ்ச்சிகள், திறந்தபோட்டிகள்

### இசை - குழு - I தரங்கள் 6,7,8,9

முதலாமிடம் - (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் (யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்).

### இசை - குழு - II தரங்கள் 10,11,12,13

முதலாமிடம் - (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - (யா/வேம்படி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - (யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்).

### நடனம் - குழு - I தரங்கள் 4,5,6,7,8,9

முதலாமிடம் - (யா/வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - (யா/சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்).

### நாட்டிய நாடகம் - குழு - II (திறந்த போட்டி)

முதலாமிடம் - (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), இரண்டாமிடம் - (யா/ வேம்படி மகளிர் கல்லூரி).

### நாடகம் - (திறந்த போட்டி)

முதலாமிடம் - (யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), இரண்டாமிடம் - (யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்).

### வில்லுப்பாட்டு (7 பேர் குழுவில்)

முதலாமிடம் - (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்).

### விவாதம் - (3பேர் குழுவில்)

முதலாமிடம் - (யா/யாழ். மத்திய கல்லூரி), இரண்டாமிடம் - (யா/சென். ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் - (யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி).

### தமிழறிவு வினா - விடை போட்டி (5பேர் குழுவில்)

முதலாமிடம் - (யா/வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் - (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் - யாழ். மத்திய கல்லூரி).

### முஸ்லிம் நிகழ்ச்சி (6,8 பேர் குழுவில்)

முதலாமிடம் - ஒஸ்மானியாக் கல்லூரி

### நாடகம் - நாட்டுக்கூத்து

முதலாமிடம் - (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி), இரண்டாமிடம் - (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி).

### நாட்டுக்கூத்து - விசேட போட்டி (சிந்து நடை)

முதலாமிடம் - (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்).

### இசை நாடகம்

முதலாமிடம் - (யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி). (91)


சிறு விளம்பரம்

**வாடகைக்கு**

கிளிநொச்சி கரடிப்போக்கு இளையவி கட்டிட தொகுப்பில் அலுவலக செயற்பாட்டுக்கும், வியா பார நடவடிக்கைக்கும் உகந்த ஒரு கடைக் கட்டிடமும், மேல் மாடியில் இரு அறைகளும் வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. தொடர்பு கொள்ளவும் - 226 - 3818. (778)











# கிராம மேம்பாடு குறித்த கலந்துரையாடல் நாளை

(சுதுமலை)

கிராம மேம்பாட்டிற்கான ஆறு மாதகாலத் திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல் நாளை இளவாலை சகாயபுரத்தில் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவன மக்கள் குழுவினரால் மேற்கொள்ளப்படவுள்ள கலந்துரையாடலில் மாதகல், மாரசன் கூடல், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள், விவசாயிகள், கடற்தொழிலாளர்கள், விதவைகள் ஆகியோர்களுடன் கியூடெக் நிறுவன உயிர்ப்பூட்டல் குழுவினரும் இணைந்து கிராம அபிவிருத்தி தொடர்பான பல திட்டங்களை முன்வைக்கவுள்ளனர்.

ஆறுமாதகால அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பஸ் போக்குவரத்து, வீதி, சுகாதார, கல்விச் செயற்பாடுகளும் முக்கியமாக கலந்துரையாடபபடவுள்ளதாக கியூடெக் நிறுவன உயிர்ப்பூட்டல் குழு ஊக்குவிப்பாளர் செல்வி றொபேட் - ஏமி தெரிவித்தார். (91)

யாழ். மாநகர சபையினரால் நடாத்தப்படும்

# பாலர் பாடசாலை விளையாட்டு இன்று நடைபெறவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் நடாத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமை யில் இடம்பெறவுள்ள இந்த நிகழ் வில் பிரதமவிருந்தினராக மேல திக அரசாங்க அதிபர் ஏ.சிவசுவாமி கலந்துகொள்கின்றார்.

சிறப்புவிருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, நல்லூர் பிரதேச செயலர் சு. தெய்வேந்திரன், பாலர் பணிப்பாளர் எல் யோகராஜா, நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். திருமறவன் ஆகியோர் கலந்துகொள்கின்ற னர்.

# உலக உணவுத்திட்டம் குறித்த விசேட செயலமர்வு இன்று

உலக உணவுத்திட்டம் 2004 தொடர்பான விசேட செயலமர்வு ஒன்று இன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கில் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பிரதேச செயலாளர், கல்வித் திணைக்களக் கணக்காளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (24)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசர கூட்டம்

(ஆனைக்கோட்டை)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான அவசர பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (46)

## கருத்தரங்கு

தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் நாளை மாலை ஐந்து மணிக்கு அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, என்.ரவிராஜ் மற் றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிவமகாராசா, ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

எனவே, அனைவரையும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.


இலவசக்கருத்தரங்கு
மகளிருக்கு ஓர் அரியவாய்ப்பு

பிரபல அழகுக் கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமார் (Advance Diploma In Herbal Beauty Culture) அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கையும் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கத்தையும் (தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் இடங்கள்) நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்
இடம்
யாழ் Y.M.C.A மண்டபம்
காலம்:
பி.ப. 2.00 மணி 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை

வடமராட்சியில்
இடம்:
இராஜலக்சுமி திரையரங்கு நெல்லியடி
காலம்:
காலை 9 மணி ஞாயிற்றுக்கிழமை 11.07.2004

அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்.

(சி/2750)

# மகேஸ்வரனை உளவு பார்த்தவருடன் எந்தவித தொடர்பும் இல்லை

## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனை உளவு பார்த்தவருக்கும், தமக்கும் தொடர்பிருப்பதாக வெளியான செய்திகளை மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மறுத்துள்ளார்.

மகேஸ்வரனை உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கொழும்பு வெள்ளவத்தைப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதான போது, இவரிடம் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் கையொப்பத்துடன் கூடிய கட்சி அடையாள அட்டை காணப்பட்டதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் இதுதொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மனோ கணேசன். குறிப்பிட்ட கட்சி அங்கத்துவ அடையாள அட்டை அனைத்துக் கட்சிகளாலும் வழங்கப்படும் எனவும், தமது கட்சியில் இணைய விரும்பிய பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கும் தமது கட்சியின் அங்கத்துவ அடையாள அட்டையைத் தாம் வழங்கியிருப்பதாகவும், கைதுசெய்யப்பட்ட நபர் தமது கட்சியின் அங்கத்துவ அடையாள அட்டையை வைத்திருந்தார் என்பதற்காக தன்மீது குற்றஞ்சாட்டுவது முறையற்ற நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சியின் வெற்றிவாய்ப்பை மழுங்கடிக்கும் நோக்குடனேயே தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவி எஸ். மஞ்சுளா யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடத்திய கல்வியியல் கண்காட்சியைப் படத்தில் காணலாம்.

# திறப்பு விழாவில் புலிகளின் முக்கியஸ்தர்; அழைத்தவருக்கு எதிராக நடவடிக்கை!

(கொழும்பு)

அரச வைத்தியசாலைத் திறப்பு விழாவுக்கு விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரை அழைத்த மாகாணசபை உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார.

திருகோணமலை கப்பல்துறையில் அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழாவுக்கான பிரதம விருந்தினராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரான திஸ்ஸ கரலியத்த அழைக்கப்பட்டிருந்தோடு, இவருடன் திருகோணமலை மாவட்ட அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜேசேகரவும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்பு விருந்தினராக ஏற்பாட்டாளர்களால் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த விழாவில் கலந்து கொண்டு பேசிய எழிலன், கரும்புலிகளை நினைவுகூருமுகமாகவே இந்த ஆயுள்வேத வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டதாக கூறியதாக அரசாங்கத்தின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜேசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒரு அரசாங்க நிகழ்வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் அழைக்கப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

# சிங்கள தேசம் போரைத் திணித்தால் நாம் விடுதலையை வென்றெடுப்போம்

## சிறப்புத் தளபதி ரமேஷ் உரை

(கொழும்பு)

சிங்கள தேசம் யுத்தம் ஓய்ந்த காலத்திலேயே மீண்டும் யுத்தத்தை திணிப்பதற்கு முனைந்தால், தேசியத் தலைவரது செயற்பாடுகளூடாக நாங்கள் நிச்சயம் விடுதலையை வென்றெடுப்போம் என - மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிறப்பு தளபதி கேணல் ரமேஷ் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர் தாயகத்தை முதற்கட்டமாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது தேசியத் தலைவரின் நோக்கமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கட்டமைப்பை சிங்கள அரசு ஏமாற்றி, காலத்தைக் கடத்தி வருகிறது. இது தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

இவ்வாறு தொடர்ச்சியாக சிங்கள அரசு ஏமாற்ற நினைத்தால், சிங்கள அரசுகளின் தவறுகள், பிழைகளை சர்வதேச சமூகத்துக்கு தேசியத் தலைவரின் பின்னால் அணிதிரண்டு உணர்த்துவோம்.

நாங்கள் மிகவும் பலமாகவும், வலுவாகவும் இருக்கிறோம். இதனால தான எங்களது பலத்தைச் சிதைக்க பல சதிமுயற்சிகள் நடைபெறுகின்றன. இதை அனைவரும் உணர்ந்திருப்பீர்கள் எனக் குறிப்பிட்ட சிறப்புத் தளபதி மேலும் கூறுகையில் -

போர் ஆரம்பித்த காலத்திலிருந்து இற்றைவரை பல துரோக செயல்களும், துரோகிகளும் எமது போர் முனைகளில் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், அனைத்து தடைகளையும் எமது தேசியத் தலைவர் உடைத்தெறிந்து இன்று தமிழீழத்தை நோக்கிய நகர்விலே நகர்ந்து கொண்டிருக்கின்றார்.

தேசியத் தலைவரது கால கட்டத்திலே நிச்சயம் நாம் விடுதலையைப் பெறுவோம். எமது தேசியத் தலைவரைப் பொறுத்தமட்டில் இவர் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. ஏனெனில், தமிழர்களுக்கான விடு



தலையைப் பெற்றுக் கொடுப்பதில் எங்களுக்கொரு தலைமைத்துவத்தை எங்களுடைய இயக்கம் தந்துள்ளது. எங்களது தேசியத் தலைவரை ஒவ்வொரு கூட்டங்களில் சந்திக்கும் போதும் வித்தியாசமான புதுமைகளை அவரிடம் காண்போம். அந்த தலைவர் தான் இன்று எம்மை வழிநடத்திக் கொண்டு இருக்கின்றார். நிச்சயமாக சிங்கள தேசம் இன்று அரசியல் ரீதியாக யுத்தம் ஓய்ந்த காலத்தில் யுத்தத்தை மீண்டும் திணிப பதற்காக முனைந்தால், எங்களுடைய தேசியத் தலைவரது செயற்பாடு ஊடாக நிச்சயமாக நாங்கள் விடுதலையை வென்றெடுப்போம் என்றார்.

இந்த நிகழ்வில் ஈகைச் சுடரினை கிழக்கு மாகாண கடற்புலிகளின் தளபதி சிறிராம் ஏற்றி வைத்தார். தமிழீழத்தேசியக் கொடியை மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் ஏற்றிவைத்தார்.

## முன்கூட்டியே நாடாளுமன்றத்தை

# கூட்டுவதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது!

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் 13 அல்லது 14 ஆம் திகதிகளில் நாடாளுமன்றைக் கூட்டுவதற்கு ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் கடும் பிரயத்தனம் செய்தபோதும், நாடாளுமன்றத்தை குறித்த காலத்துக்கு முன்னர் கூட்டும் அதிகாரம் பிரதமருக்கு மாத்திரமே உள்ளமையால், எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்கமுடியாதென அரசாங்க கட்சிகளின் சார்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அடுத்த 20 ஆம் திகதியிலிருந்து நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரியாவினால், சமர்ப்பிக்கப்படவுள்ள பிரரேரணைகள் மற்றும் ஹெல உறுமயவினால் ஒத்திவைப்பு பிரேரணையாக சமர்ப்பிக்கப் படவுளள - இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் குறித்தும், விவாதிப்பதற்கு நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் உடன்பாடு காணப்பட்டது.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம், எதிர்க்கட்சித் தலைவர்களை கைது செய்தல், ஜனநாயக சவாலுக்கு முகங்கொடுக்கவேண்டிய விதமாகச் செயற்படுதல் மற்றும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமை போன்ற பிரேரணைகளும், நாடாளுமன்றம் கூடும் போது விவாதிக்கப்பட வேண்டுமென கரு ஜெயசூரிய இந்தக் கூட்டத்தில் தனது கருத்தை முன்வைத்தார்.

இந்தக் கூட்டத்தில் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, பிரதி சபாநாயகர் அரச தரப்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, கரு ஜெயசூரிய, மஹிந்த சமரசிங்க, மாவை சேனாதிராசா, அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் ஹசன் அலி ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## காணாமற் போயுள்ள மாகாணசபை வேட்பாளர்!

தென் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரை நேற்று முன்தினத்திலிருந்து காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

டி.என் தளுவத்த என்பவரே நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் வெலிகம போலவத்த பாலத்துக்கு அருகில் வைதது காணாமற்போனவராவர். இவர் பயணம் செய்த வாகனம் இந்தப் பாலத்திலிருந்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காணாமற்போனவர் நேற்று முன்தினம் அதிகாலை நகரிலுள்ள எரிபொருள் நிலையத்துகது சென்று, தனது மிட்சுபிசி பஜிரோ வாகனத்துக்கு எரி பொருளை நிரப்பியதாகவும் இதன பின்னர் இவர் காணாமற்போயுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் இளைஞர்கள் கொலையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு பதவியுயர்வு

தமிழ் இளைஞர்களின் மீதான படுகொலைகளை முன்னின்று நடத்திய பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரி ஒருவருக்கு அண்மையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையின் அங்கத்தவராக இருந்த இந்த அதிகாரி, பல தமிழ் இளைஞர்களை கொலை செய்து பொல்கொட வாவியில் எறிந்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர் எனவும், அண்மையில் இவர் இலங்கையில் இருந்து வெளியேறி வெளிநாடு ஒன்றுக்கு சென்று திரும்பியதாகவும் இந்த ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

அழகுராணி ஒருவரின் கொலையுடன் சம்பந்தமுடையவரென குற்றஞ் சாட்டப்பட்டிருந்த நிலையில் சிறைச்சாலை சென்று வந்த மற்றொருவரும் பதவியுயர்வு பெற்றிருப்பதாகவும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இதேவேளை, போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பலரைக் கைது செய்தமை மூலம் போதைப் பொருள் பாவனைத் தடுப்பு நடவடிக்கையில் பெரும் பங்களிப்பு செய்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதுவித பதவியுயர்வுகளும் வழங்கப் படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான முறையற்ற பதவியுயர்வுகள் குறித்து தாம் உயர்நீதிமன்றம் வரை செல்லவுள்ளதாகவும் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

# ஜே.வி.பி ஆளும்கட்சியில் இருந்தாலும் விஜேவீரவின் குடும்பம் கடற்படையிடம்!

## ராவய பத்திரிகை விமர்சனம்

ஜே.வி.பியினர், அரசாங்கக் கட்சியின் பங்காளிக் கட்சியாக இருக்கும் இந்த வேளையில் ஜே.வி.பியினரைத் தோற்றுவித்த விஜேவீரவின் குடும்பம் இன்னமும் கடற்படையின் பாதுகாப்பில் இருப்பதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ரோகண விஜேவீராவின் மனைவி சிறிமணி சித்திராங்கனியும் அவரது ஐந்துபிள்ளைகளும் வெலிசர கடற்படை முகாமிலுள்ள வீடொன்றில் வசித்து வருகின்றார்கள். அத்தோடு அவரது பிள்ளைகள் - பாடசாலை, ரியூசன் செல்வதற்கு வாகனமும் இரு சாரதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அவர்களுக்கு பாதுகாப்புக்காக இரு கடற்படை பெண் படையினர் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு மூன்று நேரம் சாப்பாடு வழங்கப்படுகிறது. இதற்குப் புறம்பாக சீனி, பிஸ்கட், தேயிலையும் இவர்களுக்கு கொடுக்கப் படுகின்றன.

மின்சாரம், தொலைபேசி, உணவு, வாகன வசதிகள் வழங்கப்படுவதற்கு அரசாங்கத்துக்கு ஒன்றரை இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் இவர்களை எந்தவொரு ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட சந்திக்கவில்லை என்றும் ராவய மேலும் தெரிவித்தது.

# தேசிய வனவிலங்கு பூங்கா மீரிகமவில் அமைக்கப்படும்

நாட்டின் இரண்டாவது தேசிய வனவிலங்கு பூங்காவை மீரிகம காட்டுப் பகுதியில் அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கவின் வழிகாட்டலில் பின்னவெலவில் தேசிய வன்விலங்குப் பூங்காவை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தேசிய வனவிலங்குப் பூங்காவின் பணிப்பாளர், பிரிகேடியர் ஏ.என்.ரி. பெரேரா இது குறித்து தெரிவிக்கையில் - தற்போது பின்னவெலவில் ஒதுக்கப்பட்டுள்ள 35 ஏக்கரில் ஒரு வன விலங்குப் பூங்காவை அமைக்க முடியாது. ஆகக் குறைந்தது இதற்கு 100 ஏக்கர் நிலப்பகுதியாவது தேவை. பின்னவெலவில் வனவிலங்குப் பூங்காவை விஸ்தரிப்பதற்கு மேலதிக நிலப்பரப்பு இல்லை. இதனால் மீரிகம வனவிலங்குப் பகுதியில் இந்த வனவிலங்கு பூங்காவை அமைக்க திட்டமிடப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நட்வெஸ்ட் இறுதிப் போட்டிக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதி!



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் கிரிக்கெட் தொடரில் எட்டாவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை தோற்கடித்ததன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றது.

இப்போட்டித் தொடரில் கலந்துகொள்ளும் நியூஸிலாந்து அணி ஏற்கனவே இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றிருந்தது.

இந்த நிலையில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் இரண்டாவது அணியைத் தெரிவுசெய்வதற்கான ஆட்டமாக - நேற்றுமுன்தினம் நடந்த எட்டாவது லீக் ஆட்டம் கருதப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணிக்கு வாய்ப்புக் கொடுத்தது.

இங்கிலாந்து அணி வீரர்கள் ஆரம்பம் முதலே அபாரமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினர். அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 11 ஓட்டங்களைப் பெற்று ட்ரஸ்கோதிக் ஆட்டமிழந்தார்.

அடுத்து 8 ஓட்டங்களுடன் இருந்த அணித் தலைவர் வோகன் ஆட்டமிழந்தார். இதனையடுத்து ஆடுகளத்தில் இருந்த கீயுடன் ஸ்ரைரஸ் இணைந்துகொண்டார்.

கீ மெதுவாக ஓட்டங்களை எடுத்துக் கொண்டிருக்க - ஸ்ரைரஸ் சிக்ஸர் , பவுண்டரி என்று ஓட்டங்களை குவித்தார்.

54 ஓட்டங்களுடன் இங்கிலாந்து இருந்த போது 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த கீ ஆட்டமிழந்து சென்றார். அடுத்து ஸ்ரைரஸு டன் இணைந்த பிளின்ரொப் அதிரடி ஆட்டத்தினால் ஆடுகளத்தை போர்க்களமாக்கினார்.

அணி 280 ஓட்டங்களை பெற்றபோது தான் இந்த ஓட்டமழை ஓய்ந்தது. பிளின்ரொப் 104 பந்துகளில் 7 சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 123 ஓட்டங்களைக் குவித்தார்.

அடுத்து ஸ்ரைரஸ் 116 பந்துகளில் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 100 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து வந்த கொலிங்வூட், ஜோன்ஸ் ஆகியோர் தலா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 285 ஓட்டங்களை 7 விக்கெட் இழப்புக்குப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் கைல் 3 விக்கெட்டுக்களையும், ஸ்மித் 1 விக்கெட்டையும் பெற்றனர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியும் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆரம்ப ஆட்டக்காரரான கைல் 165 பந்துகளில் 12 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 132 ஓட்டங்களைப் பெற்று கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இது இவரது நூறாவது ஒரு நாள் போட்டியாகும்.



ஸ்மித் 10 ஓட்டங்ளையும், சர்வான் 78 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்களையும், லாரா 10 ஓட்டங்கைளையும், பவல் ஆட்டமிழக்காமல் 22 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.1 ஓவர் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன்மூலம் நட்வெஸ்ட் இறுதிப் போட்டியில் விளையாட மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதிபெற்றது.

## ஹொக்கிப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் - யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் -

இன்று பி.ப 4 மணிக்கு, 'பி' பிரிவில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், சென்றலைட்ஸ் கழக அணிக்கும் இடையிலான ஆட்டமும்,

பி.ப 5 மணிக்கு 'ஏ' பிரிவில் உள்ள வடமராட்சி ஹொக்கி கழக அணிக்கும், ஓல் கோல்ட்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டமும் நடைபெறும்.

## கூடைப்பந்தாட்ட போட்டி விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனம் வருடாந்தம் நடாத்தும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடசாலை மட்டப் போட்டிகள் ஆண்கள் பிரிவில் 17 மற்றும், 19 வயதுப் பிரிவுகளாகவும், பெண்கள் பிரிவில் 19 வயதுப் பிரிவினருக்கும் நடத்தப்படவுள்ளன.

கழக மட்டப் போட்டிகள் - சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் மட்டும் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

பாடசாலை அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் தலைவர் அல்லது செயலாளரின் சிபார்சுடன் செயலாளர், சூடாமணி அகிலன், லண்டன்மொழி பாடசாலை, 774 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அஸ்ரா கிண்ணப் போட்டி யூனியன் கல்லூரி அணி வெற்றி

அஸ்ரா கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 14 வயதுக் குட்பட்டோர் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், யூனியன் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் - யூனியன் கல்லூரி அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் - முதலில் யூனியன் கல்லூரி அணி துடுப்பெடுத்தாடியது.

41.1 ஓவர்களில் யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுஜாந்தன் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள் ஜே.நிக்ஷன், எஸ்.கமலாதரன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 55.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்மூலம் முதல் இனிங்ஸில் ஆறு ஓட்டங்களால் யூனியன் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யூனியன் கல்லூரி சார்பில் பந்து வீசிய ரி.ஜெயவாணன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், எஸ்.ரஜந்தன் 7 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், எஸ்.பவகணேஸ் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

## கப்டன் பதவி மீது ஆசையில்லை; சச்சின் டெண்டுல்கர் கூறுகிறார்!

(சென்னை)

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் பதவி மீது ஆசை இல்லை என்று நட்சத்திர வீரர் டெண்டுல்கர் கூறினார்.

இவர் சென்னையில் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோது இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் -

15 வருட காலமாக நான் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடி வருகிறேன். தற்போது நான் ஆட்டத்தின் வேகத்தை குறைத்து விட்டதாகக் கூறுவது தவறு.

மாறாக நான் அனுபவத்தை வைத்து ஆட்ட முறையை மாற்றியுள்ளேனே தவிர - ஆட்டத்தின் வேகத்தைக் குறைக்கவில்லை. கடினமான பந்துகளை அடித்து ஆடுவதை சற்றுக் குறைத்துள்ளேன்.

இந்திய அணியில் விளையாடும் 11 வீரர்களும், அவர்களுக்கு ஏற்றாற்போல் ஆடிவருகின்றனர்.

தற்போதுள்ள இந்திய அணி சிறப்பானதாக உள்ளது. நமது அணி வீரர்கள் ஒருங்கிணைந்து கடினமாக ஆடுவதால் இந்திய அணி வெற்றிபெறுகின்றது.

ஷேவாக் மற்றும் வி.வி.எஸ்.லக்ஷ்மனின் சிறப்பான ஆட்டத்தால் எனக்கு எந்தவிதமான நெருக்கடியும் இல்லை. எப்பொழுதும் எனக்கு இருக்கும் பொறுப்பு தற்போது உள்ளது. மற்ற வீரர்களைப் பற்றி நான் சிந்திப்பது கிடையாது.

மேலும், கிரிக்கெட்டை பொறுத்தவரையில் ஏற்றமும், இறக்கமும் சகஜமான ஒன்றாகும். அதை நான்



எப்போதும் ஒரு பொருட்டாக எடுத்ததில்லை.

மீண்டும் நான் கப்டனாவது குறித்து சிந்திக்கவே இல்லை. குறுகிய காலம் நான் கப்டன் பதவியில் இருந்தாலும், என்னுடைய குறிக்கோள் கப்டன் பதவியை அடைவது அல்ல.

கப்டனாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி என்னால் சிறப்பாக ஆடமுடியும். இப்போதைய ஆட்டமே எனக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் அளிக்கிறது. என்னைப் பொறுத்தவரை அணியின் வெற்றிதான் முக்கியம் ஆகும்.

ஒருநாள் போட்டியைப் பொறுத்தவரையில் நானும், ஷேவாக்கும் தொடக்க ஜோடியாக தொடர்ந்து சிறப்பாக ஆடி வருகிறோம். உலகின் சிறந்த தொடக்க ஜோடியாகவும் நாங்கள் உள்ளோம்.

இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏ.பி.சி லீக் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 4.15 மணிக்கு 'பி' பிரிவில் கொய்யாத்தோட்டம் அணிக்கும் - எவரெஸ்ட் அணிக்கும் இடையேயான போட்டியும் -

பி.ப 5.15 மணிக்கு 'ஏ' பிரிவில் சென்.மேரிஸ் 'ஏ' அணிக்கும், சென்.அன்ரனீஸ் அணிக்கும் இடையிலான போட்டியும் நடைபெறவுள்ளன.

இந்த ஆட்டங்கள் யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.




# யூரோ - 2004 சிறந்த வீரராக கிரீஸ் கப்டன் தியோடராஸ்!



(லிஸ்பன்)

கிரீஸ் அணியின் கப்டன் தியோடராஸ் ஷகோராகிஸ் யூரோ - 2004 போட்டியின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

போர்த்துக்கலில் நடைபெற்ற யூரோ - 2004 போட்டியின் இறுதிப் போட்டியில் கிரீஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்த நிலையில் யூரோ - 2004 போட்டியில் சிறந்த வீரராக கிரீஸ் கப்டன் ஷகோராகிஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்க கூட்டமைப்பின் 8 பேர் கொண்ட குழு - சிறந்த வீரரைத் தேர்தெடுத்தது.

யூரோ - 2004 போட்டி முழுவதுமே கிரீஸ் அணியின் கப்டனான ஷகோராகிஸின் கப்டன் ஷிப் தன்மையும், அவரது விளையாட்டுத் திறமையும், அருமையாக இருந்தது என்று இந்தக் குழுவின் உறுப்பினராக இருந்த பிரான்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் ஜெரார்ட ஹீல்லியர் தெரிவித்தார்.

இறுதிப்போட்டிக்கான ஆட்டநாயகன் விருதும் ஷகோராகிஸுக்குக் கிடைத்தது. யூரோ - 2004 போட்டியில் சிறந்த வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஷகோராகிஸுக்கு வரும் ஓகஸ்ட் 26 ஆம் திகதி மெனாகோவில் நடைபெறவுள்ள மெகா விழாவில் டிரொபி வழங்கப்படவுள்ளது.

இதுமட்டுமன்றி, இந்தக் குழுவின் அறிவிக்கப்பட்ட ஸ்ரார் அணியிலும் ஷகோராகிஸ் இடம்பெற்றுள்ளார்.

கிரீஸ் அணியின் கோல் கீப்பர் அன்ரனியோஸ் - நிகோபோலிடிஸ், சென்டர் - ஹொப் டெல்லாஸ், தடுப்பு ஆட்டக்காரர் செய்டாறிடிஸ் ஆகியோர் ஸ்ரார் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

## மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டி

## ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயம் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தைப் பெற்றது!

மாவட்ட மட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலயம் முதலாம் இடத்தையும், ஹாட்லிக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், கிளிநொச்சி முழங்காவில் மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (12)

## காட்சி உதைபந்தாட்டப் போட்டி புதுக்குடியிருப்பு அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகளின் நினைவாக வல்வை விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னொளியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் புதுக்குடியிருப்பு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதியது.

முதல் பாதி நேர ஆட்டத்தில் கிடைத்த தண்டனை உதையை சரியான முறையில் பயன்படுத்தி 17 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை புதுக்குடியிருப்பு அணியினர் அடித்தனர்.

இந்தக் கோலை அந்த அணியைச்சேர்ந்த ராகவன் அடித்தார். இடைவேளைக்கு முன்னர் வல்வை விளையாட்டுக்கழகத்தால் எவ்வித கோலும் அடிக்க முடியாததால் 1:0 என்ற நிலையில் இடைவேளைக்கு ஆட்டம் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடரப்பட்டது.

மிகுதி பாதிநேர ஆட்டத்தின் போது புதுக்குடியிருப்பு வீரர் அகிலகுமார் 9 ஆவது நிமிடத்திலும், 12 ஆவது நிமிடத்திலும் இரண்டு கோல்களைகளை அடித்தார்.

அந்த அணியின் வீரர் பிரகாஷ் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த பந்தை சரியான முறையில் பயன்படுத்தாததால் மேலும் ஒரு கோல் அடிக்கும் வாய்ப்பை புதுக்குடியிருப்பு அணி இழந்தது.

இதனால் புதுக்குடியிருப்பு அணி வல்வை விளையாட்டுக்கழகத்தை 3:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

(12)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## யாழ். குடாநாட்டில்

# சட்டவிரோத கல் அகழ்வுகள் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் ஈரநிலப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத கல் அகழ்வு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மத்திய சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகம் ஈடுபட்டிருக்கிறது.

குடாநாட்டில் அண்மைக்காலமாக பெருமளவு கல் சட்டவிரோதமாக அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. இதில் கல் அகழ்வது தடைசெய்யப்பட்ட - ஈர நிலப் பிரதேசங்களிலும் பெருமளவு அகழ்வு நடவடிக்கைகள் சட்டவிரோதமாக இடம்பெற்றுவருகின்றன.

ஈரநிலப் பிரதேசங்களில் காணப்படும் கற்கள் அகழப்படுவதனால், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் அந்தப் பகுதி நிலம் வளமற்றதாக மாறும் ஆபத்தும் ஏற்படுகிறது.

அத்துடன், இந்தப் பகுதியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்படும் கற்கள் கடினத் தன்மை குறைந்ததாக இருப்பதால், கல்லுடைக்கும் ஆலைகளில் இவற்றை உடைக்கும்போது பெருமளவு தூசி வெளியேறி சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துகிறது.

கடினத் தன்மை குறைந்த இந்தக் கற்களை கட்டடப் பாவனைக்குப் பயன்படுத்துவதும் ஆபத்தானது.

எனவே, ஈரநிலப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க மத்திய சுற்றச்சூழல் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதன்படி, பயன்பாடற்ற நிலங்கள், அரச காணிகள், ஈரநிலப் பகுதிகளில் இருந்து அகழ்ந்து எடுக்கப்படும் கற்களை வாங்கி உடைக்கும், கல்லுடைக்கும் ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இத்தகைய செயலில் ஈடுபடும் கல்லுடைக்கும் ஆலைகளுக்கு வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு உரிமங்களை ரத்துச் செய்வது குறித்து ஆராயப்படும் என மத்திய சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலர் தெரிவித்தார்.

### வெடிவிபத்தில் இராணுவ சிப்பாய் காயம்

கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சிறுகாயத்திற்குள்ளாகியதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 11.20 மணியளவில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடியகற்றும் கருவிகளைப் பயன்படுத்தி கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

# நுணாவில் கிழக்குப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நுணாவில் கிழக்குப் பகுதி மற்றும் நாவற்காட்டின் சில பகுதிகளில் வெடிபொருள் அகற்றப்பட்டிருப்பதாக யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்தது.

பொது மக்கள் மீளக் குடியேறி வரும் இந்தப் பகுதிகளில் வெடிபொருள் அகற்றப்பட்டுள்ளதன் மூலம் மக்கள் நன்மையடைய முடியும் எனவும், விரைவில் இந்தப் பகுதிகள் பொது மக்களிடம் கையளிப்பதற்காக அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர்களிடம் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

## திருகோணமலையில் நடைபெறவுள்ள

# மேசன் தொழிலாளர்களுக்கான பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

மிற்சுயி சிமெந்து தயாரிப்பாளர்களின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட மேசன் தொழிலாளர்களுக்கான பயிற்சி நெறியொன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் தொழிற்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மேசன் தொழிலாளர்கள் தமது விபரங்களை உடன் தந்துதவுமாறு யாழ். தொழிற்துறைத் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெற்றதும் மேசன் தொழிலாளர்களின் தொகைக்கேற்ப இந்தப் பயிற்சி - குழுக்களாகப் பிரித்து வழங்கப்படவுள்ளது.

திருகோணமலையில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கான முழுச் செலவும் மிற்சுயி சிமெந்து தயாரிப்பாளர்களாலேயே ஒழுங்கமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# மகாபொல கொடுப்பனவை அதிகரிக்க அரசு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக வர்த்தக வாணிப மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

தற்போது வழங்கப்படும் 1650 ரூபா, 2 ஆயிரம் ரூபாவாகவும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்போருக்கு மாதாந்தம் வழக்கப்படும் 650 ரூபாவை ஆயிரம் ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

650 கோடி ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்படவுள்ள மகாபொல தலைமைக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. (தே)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# தாலிக்கொடியை அபகரித்த பெண் வகையாக மாட்டிக்கொண்டார்!

யாழ். போதனா வைத்தியசாலையில் பெண் ஒருவரின் தாலிக் கொடியைத் திருடிய மற்றொரு பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு யாழ். போதனா வைத்தியசாலையின் எட்டாம் இலக்க விடுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது -

கிளிநொச்சியைச் சேர்ந்த பெண்ணொருவர் எட்டாம் இலக்க விடுதியில் சிகிச்சைபெற்றுவந்த தனது கணவனுக்கு உதவியாக எட்டாம் இலக்க ஆண்கள் விடுதியில் தங்கிநிற்பது வழக்கம்.

குறிப்பிட்ட பெண் இரவில் பெண்களுக்கான எட்டாம் இலக்க விடுதியிலேயே நித்திரை செய்வார்.

வழமைபோல் நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட பெண் விடுதியில் நித்திரைசெய்த சமயம் அதே விடுதியில் தனது மகளுக்கு உதவியாக நின்ற பெண் ஒருவர், இவருக்கு அருகில் நித்திரை செய்துள்ளார்.

தனது மகளுக்கு உதவியாக நின்ற பெண் நள்ளிரவு வேளை கிளிநொச்சியைச் சேர்ந்த குறிப்பிட்ட பெண்ணின் தாலிக்கொடியை மிகச் சாதுரியமாகக் கழற்றி, பால்மாரின் ஒன்றினுள்ளே புதைத்து வைத்துவிட்டார்.

அதிகாலை நித்திரைவிட்டெழுந்ததும் தாலிக்கொடியைக் காணாத பெண், விடுதி மேற்பார்வையாளர்களிடம் முறையிட்டதுடன், குறிப்பிட்ட பெண்ணே தனது தாலிக் கொடியைத் திருடியிருக்கக் கூடும் என்று சந்தேகம் தெரிவித்தார்.

இதனையடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அழைத்துச் சோதனைசெய்த வேளையில் குறிப்பிட்ட பெண்ணின் பாவனையில் உள்ள 'நெஸ்ரோமோல்ட்' ரின் ஒன்றினுள் புதைக்கப் பட்டிருந்த தாலிக்கொடி கண்டுபிடிக்கப்பட்டது.

பெண் பாதுகாப்பு ஊழியர்களால் கைதுசெய்யப்பட்ட மேற்படி பெண், வைத்தியசாலை நிர்வாகத்தின் ஊடாகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (லெ)







கடந்த வாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் - யாழ்ப்பாணம் தேவா மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கண்டிய நடனத்தின் சில காட்சிகள்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### கிராம அலுவலர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட கிராம அலுவலர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியானது வடக்கு - கிழக்கு மாகாண அவசர புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட கிராம அலுவலர்களில் முதலாம் தொகுதியினருக்கே இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது. (113)

### சங்கானையில் 32 குடும்பங்களுக்கு மலசலகூடம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வறுமைக்கோட்டுக் குட்பட்ட 32 குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

### நடமாடும் வைத்தியசேவை

சுன்னாகம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனை வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்படும் நடமாடும் வைத்தியசேவை, நாளை - அளவெட்டி வாணி அறிவொளி முன்பள்ளி நிலையத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.

### குமுளடி விவசாய வீதி புனரமைக்கப்படவுள்ளது

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் 2004 ஆம் ஆண்டுக்கான கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நெடுந்தீவு மேற்குப் பகுதியில் உள்ள குமுளடி விவசாய வீதி ஒரு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கென அதிகார சபையினால் 75 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. மீதி 25 ஆயிரம் ரூபாவுக்கான வேலைகள் மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த விவசாய வீதி புனரமைப்பினால் அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (113)

### அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(உடுவில்)

உடுவில் தெற்கு புதுமடம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு கா.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமை தாங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கொக்குவில் சனசமூக நிலையப் பகுதியில் சிரமதானம்

(கொக்குவில்)

எதிர்வரும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கொக்குவில் கலைமகள் சனசமூக நிலையப்பகுதி - நல்லூர் பிரதேச சபையினால் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் முதற்கட்டமாக கொக்குவில் கலைமகள் சனசமூக நிலையச் சுற்றாடலை, இந்தப் பகுதி மக்களும், நல்லூர்ப் பிரதேச சபையினரும் இணைந்து எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யவுள்ளனர்.






# தொடர் முன்னேற்றத் திட்டத்தினால் அதிக இலாபம் பெறலாம்!

உங்கள் நிறுவனம் இலாபமின்றி இயங்குகிறதா அல்லது குறைந்த இலா பத்தில் நடத்திக் கொண்டிருக்கிறீர்களா? அதிகமான இலாபத்தை எப்படிப் பெறுவது என்று தெரியாமல் தவிக்கிறீர்களா? இதற்காக நீங்கள் எந்தச் செலவும் செய்யவேண்டாம். நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் உங்கள் நிறுவனத்தின் செயற்பாடுகளை சற்று கூர்மையாகக் கவனிப்பதுதான்.

வெளிநாடுகளில் 'தொடர் முன்னேற்றத்திட்டம்' என்ற இந்தத் திட்டத்தின் மூலம் பல நிறுவனங்கள் மிகுந்த பயன் பெற்றுள்ளன. தற்போது எமது நாட்டிலும் பல பெரிய நிறுவனங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வெற்றி கண்டுள்ளது.

இந்தத் திட்டத்தை பெரிய தொழில் நிறுவனமோ, அலுவலகமோ, சிறிய தொழிற்கூடமோ எதிலும் நடைமுறைப் படுத்தமுடியும். 'தொடர் முன்னேற்றத் திட்டம்' என்பது ஒரு தொழிலகத்தில் ஒவ்வொரு மாதமும் அல்லது குறிப்பிட்ட கால எல்லைக்குள் அதன் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதில் முன்னேற்றம் காண்பதாகும்.

ஒரு தொழில் செய்வோர் தாம் தொழில் தொடங்கிய போது தனது பொருள் உற்பத்திக்காக, ஒரு குறிப்பிட்ட மூலப் பொருளை அந்தக் கால சூழ்நிலைக்கு ஏற்ப வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து இருப்பார். காலபபோக்கில் அதே தரத்துக்கு இணையாக அந்த மூலப்பொருள் உள்நாட்டிலேயே விலை குறைவாகக் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கும். அதை அந்தத் தொழில் செய்வோர் கவனிக்காமல் விட்டிருப்பார்.

இதுபோல மூலப் பொருள் வாங்குவதிலிருந்து, முழுப்பொருள் உற்பத்தியாகி வெளியே செல்வது வரை பல செயற்பாடுகள் ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும் இருக்கும். இந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் தொடர்ந்து ஆய்வுக்கு உடபடுத்தித் தொழில் முனைவோரின் தேவையற்ற செலவைக் குறைக்கும் முயற்சியையும், பொருளின் தரத்தை அதிகரிக்கும் முயற்சியையும் மேற்கொள்ளலாம். இதன் மூலம் இலாபம் கணிசமாக உயர வாய்ப்புண்டு.

முதலில் ஒரு தொழில் நிறுவனம் தன்னுடைய அனைத்துச் செயற்பாடுகளையும் வரிசைப் படுத்த வேண்டும்.

பொதுவாக ஒரு நிறுவனம் உற்பத்திப் பிரிவு, நிர்வாகப் பிரிவு, விற்பனைப் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளைக் கட்டாயமாகக் கொணடிருக்கும். சிறு நிறுவனங்களில் நிர்வாகப் பிரிவும், விற்பனைப் பிரிவும் இணைந்து இருககும். என்றாலும், அதன் செயறபாடுகள் இருக்கவே செய்யும்.

தொழில் முனைவோர் முதலில் இந்தப் பிரிவுகளின் சுழற்சியான செயற்பாடுகளை வரிசைப்படுத்த வேண்டும்.

பின்பு செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அப்போது அந்தச் செயற்பாட்டின் உண்மைத் தன்மை வெளிப்படும். உதாரணமாக ஒன்றைப் பார்ப்போம்.

மின் விசிறிகள், இறக்கைகள் செய்யும் ஒரு துணை நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் - இறக்கைகளை இயந் திரத்தில் பூட்டி, பின் அவை துருப்பிடிக் காமல் இருப்பதற்கான எண்ணையில் தோய்த்து எடுத்து, ஒரு தகர மேசையில் அடுக்கி வைத்து விடுவார்.

அந்த இறக்கைகள் வர்ணம் பூசுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறக்கைகளின் மேல் பூசப்பட்டுள்ள எண்ணெயை மண்ணெண்ணை கொண்டு நீக்கி, பிறகு அதன் மீது வண்ணப் பூச்சு செய்யப்பட்டு வந்தது. இது சுழற்சியான செயற்பாடாக அந்த நிறுவனத்தில் நிலவி வந்தது.

அந்த நிறுவனம் தன் செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் ஆய்வு செய்தபோது, இறக்கைகளுக்கு எண்ணெய் பூசுவது தேவையற்ற செயலென உணரப்பட்டு, 'ப்ரஸ்ஸிங்' செய்த இறக்கைகளை நேராக வண்ணப்பூச்சு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்மூலம் எண்ணெய், அதை இறக்கையின் மீது பூசுவதற்குத் தேவையான மனித ஆற்றல் எண்ணெயை நீக்குவதற்குத் தேவையான மண்ணெண்ணெய், அதைத் துடைப்பதற்குத் தேவையான பருத்திக் கழிவு, இந்தப் பணிகளைச் செய்வதற்குத் தேவையான மனித ஆற்றல் ஆகிய அனைத்தும் மீதப்படுத்தப்பட்டன.

எப்போதோ ஒரு குறுகிய காலத்தேவையின் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற்பாடு பழக்கத்தின் காரணமாக தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இதுபோன்று உங்கள் நிறுவனத்திலும் எத்தனையோ செயற்பாடுகள் இருக்கலாம். பழக்கத்தின் காரணமாக உங்கள் பார்வைக்கு அவை தேவையானவை போலவே தோன்றும். செயற்பாடுகளை வரிசைப்படுத்தி கூர்ந்து கவனித்தால், தேவையற்றவை எவை என உணர முடியும்.

அவற்றை நீக்குவதன் மூலம் இலாபத்தைக் கணிசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

நன்றி - வளர்தொழில்

# நிறுவனத்துக்கு நன்மை பயக்கும் தொழில் புரிஞரின் ஒழுங்கமைப்பு

**தொ**ழில் நிறுவனம் ஒன்றில் தொழில்புரியும் ஒருவர் - முதலில் செய்யவேண்டிய விடயம் தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளுதலாகும்.



தன்னைத்தானே ஒழுங்குபடுத்திய தொழில் புரிஞர் ஒருவர் - தொழில் நிறுவனத்தின் உற்பத்தியில், அதன் வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுக்கிறார்.

இவ்வாறாகத் தன்னைத்தான் ஒழுங்குபடுத்தும் ஊழியராலும், தொழில் புரிஞராலும் நிறுவனம் பலவித நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறது. நிறுவனங்களும் இத்தகையவர்களின் பணியையே விரும்புகிறது.

தன் ஒழுங்குடன் வாழ்ந்தால் மட்டும் தொழில் நிறுவனம் நன்மைகளைப் பெற்றுவிடும் என்று கூறிவிடமுடியாது. தான் மட்டும் ஒழுங்காகக் கடமைகளை அல்லது வேலைகளைச் செய்கிறேன் என்று கருதி, தன்னொழுங்குகளை மட்டுமே ஒரு தொழில் புரிஞர் பார்த்துக்கொண்டிருத்தல் கூடாது.

அதாவது தன்னை ஒழுங்குபடுத்துவதோடு நிற்கவேண்டிய ஊழியர்களும் தொழில் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிகின்றார்கள் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாக இருக்கிறது.

இவ்வாறான ஊழியர் - தான் தன்னொழுங்குடன் தொழில்புரிவதை மட்டுமே கவனத்தில் கொள்ளவேண்டும். மற்றவர்களை ஒழுங்குபடுத்தும் செயலுக்குச் சென்று வீணாக மூக்கை நுழைத்து இடர்படக்கூடாது.

மற்றையவர்களை ஒழுங்குபடுத்த வேண்டிய நிலையில் அல்லது தகுதிப்பாட்டில் இருக்கும் ஒரு தொழில் புரிஞர் - மற்றையவர்களை ஒழுங்குபடுத்தாமல் விடுவது எத்தகைய தவறுக்கு உள்ளாகுமோ அதேயளவு தவறு அல்லது அதற்கும் மேலான தவறு தன்னளவில் ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டிய தொழில் புரிஞர் - மற்றையவர்களை ஒழுங்குபடுத்த முனையும்போது ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிலையில் மற்றையவர்களை ஒழுங்கு படுத்த வேண்டிய தொழில் புரிஞர் - அவர்களை எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என்பதில் கவனம் எடுக்கவேண்டியது அவசியமாகிறது. அவ்வாறு இல்லாவிட்டால், நிறுவனத்துக்குள் காணப்படும் ஒழுங்குக் கட்டமைப்பு குலைந்துபோக வாய்ப்பு ஏற்படும்.

ஒரு தொழில் புரிஞருக்கு முக்கியமான கடமை தமது வேலையை முதலில் ஒழுங்குபடுத்துவதாகும். அதன் பின்னர் மற்றையவர்களுக்கு வழிகாட்டியாகவும், ஊக்கப்படுத்துபவராகவும் தொழில் புரிஞர் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு இருக்கும் தொழில் புரிஞர் - ஏனைய தொழில் புரிஞர்களால் மதிக்கப்படுவார்கள், ஏனைய தொழில் புரிஞர்களும் உதவிபுரிய முன்வருவர்.

ஒரு தொழில் புரிஞர் தன்னையும் ஒழுங்குபடுத்தி, ஏனையோரையும் ஒழுங்குபடுத்தி வழிகாட்டியாக அமைகின்றபோது, அத்தகைய தொழில் புரிஞர்களைக் கொண்ட நிறுவனம் சிறந்த தொழில் நீறுவனமாக இயங்குவதற்கு வழியேற்படும்.

உலகளாவியரீதியில் சிறந்த தொழில் நிறுவனம் என்ற பெயரையும், அந்த நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகமும் ஏற்படமாட்டாது.

- பூ.நகுலன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | பருத்தித்துறை | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 50/= | 50/= | 60/= | 45/= | 40/= | 40/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 30/= | 40/= | 20/= | 20/= | 30/= | 40/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 85/= | 80/= | 80/= | 80/= | 80/= | 90/= | 70/ | 40/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= | 40/= |
| பாகற்காய் | 80/= | 70/= | 60/= | 60/= | 50/= | 40/= | 50/= | 60/= |
| கரட் | 80/= | 80/= | 80/= | 60/= | 50/= | 80/= | 70/= | 60/= |
| பீற்றூட் | 35/= | 30/= | 40/= | 40/= | 50/= | 30/= | 40/= | 40/= |
| முருங்கக்காய் | 160/= | 140/= | 150/= | 140/= | 160/= | 120/= | 120/= | 200/= |
| வெங்காயம் | 40/= | 30/= | 40/= | 30/= | 40/= | 30/= | 65/= | 50/= |
| பச்சை மிளகாய் | 50/= | 50/= | 60/= | 50/= | 40/= | 40/= | 50/= | 60/= |

# சகல பிரதேசத்திலும் பயிரிடக்கூடிய கறிமிளகாய் உற்பத்தி செய்கைமுறை

மிளகாய் ஒரு சிறந்த சுவையூட்டியாக உணவுகளுக்குப் பயன்படுகின்றது. இதில் இருக்கும் பெப்பரின் என்ற இரசாயனமே மிளகாய்களின் காரத்தன்மையைத் தீர்மானிக்கிறது.

சில மிளகாய் வகைகளின் காரத்தன்மை குறையும்போது மிளகாயின் அளவு பெரி



கறிமிளகாய் 'சொல ரேசி' வகையைச் சேர்ந்தது. இதை 'கப்சிகம் அனம்' என்று தாவரவியல் பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.

கறிமிளகாய் இலங்கையின் சகல வெப்பப் பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யக்கூடியதாக விளங்குகிறது. கடல் மட்டத்திலிருந்து 1500 மீற்றர் உயரமான பிரதேசம் வரை - வருடம் முழுவதும் இதனை பயிர் செய்யலாம். மேலதிகமாக நீர் விநியோகித்து சிறுபோகத்தில் சிறப்பான விளைச்சலைப் பெறமுடியும்.

நன்றாக நீரை உறிஞ்சிக்கொள்ளும் மணலோடு சேர்ந்த மண் சிறந்ததாகும். மண்ணில் Ph அளவு 5.5 - 6.8 இற்கு இடையில் இருந்தால் நன்று. மண்ணில் தேவைக்கதிகமான ஈரத்தன்மை இருந்தால் உற்பத்தியின் போது நோய்கள் ஏற்பட வாய்ப்பாகும்.

**நிலத்தை ஒழுங்கு செய்தல்.**

**ஈரவலய பிரதேசம்**

களைகளை நீக்கி, 30-30 செ.மீ தூரத்தில் மிளகாய்க் கன்றுகளை நடவேண்டும்.

**உலர்வலயப் பிரதேசம்**

15-20 செ.மீ ஆழத்துக்கு மண்ணை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைச் சமப்படுத்தி பாத்திகளை அமைக்க வேண்டும்.

**மிளகாய் வகைகள்**

சீ.ஏ.8 - இந்த வகை சாதாரண மஞ்சள் நிறம் கொண்டதாகும். மிளகாயின் வெளிப்பகுதி சுருக்கமாகவும், மினுங்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படும்.. இதன் காம்பு சதைப்பகுதிக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும்.

ஹங்கேரியன் யெலோ வெக்ஸ் - இந்த வகையும் மஞ்சள் நிறமாகவும் வெளிப் பகுதி மினுங்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகிறது.

இது கூம்பு வடிவமாகவும், கீழ்ப்பகுதி கூராகவும் இருக் கும். இந்தவகை மிளகாய்க் கன்றுகள் பக்றீரியாத்தாக்கம், மரங்கள் வாடிப் போதல் போன்ற நோய்களுக்கு உள்ளாவதால், இவற்றுக்கு தாழ்ந்த ஈரவலயம், மத்திய ஈரவலயப் பிரதேசங்கள் உகந்ததல்ல.

**விதைகளின் தேவை**

சீ.ஏ.8 - ஒரு ஹெக்ரெயருக்கு 1 கிலோ கிராமும், ஹங்கேரியன் யெலோ வெக்ஸ் - ஹெக்ரெயருக்கு 1.75 கிலோ கிராமும் விதைகள் தேவை. விதைகளை ஒரு மாதத்துக்கு முன் பதியம் போட்டு, கன்றுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும.

**பதியம் போடுதல்**

நன்றாக நீர் உறிஞ்சிக்கொள்ளும் நிழலில்லாத நிலம் ஒன்றை தெரிவுசெய்து, 3 மீற்றர் நீளமும், 90 செ.மீற்றர் அகலமும், 15 செ.மீற்றர் உயரமும் கொணட பாத்திகளை ஒழுங்கு செய்து கொள்ளவேண்டும். பின்பு ஒழுங்கு செய்துகொண்ட பாத்திகளின் 1 வர்க்கமீற்றருக்கு, நன்றாக உக்கிய காபனிக் உரம் 3 அல்லது 4 கிலோகிராமைப் போட்டு மண்ணுடன் கலந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு தயாரித்துக் கொண்ட பதியப் பாத்திகளில் உமி மற்றும் வைக்கோல்களைத் தட்டுகளாகப் பரத்தி எரித்துக்கொள்வதனால், மண்ணை விளைச்சலுக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொள்ளலாம் அல்லது கெப்டான் அல்லது திரா்ம் ஆகிய கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதானலோ அல்லது ஓர் அளவான கனமான பொலித்தீன் ஒன்றினால் பதியப் பாத்திகளை மூடி, பின்பு இரு வாரங்கள் சூரிய ஒளிபடுமாறு வைத்து, மண்ணை அவித்துக் கொள்வதனால் பதியப் பாத்திகளை ஏற்றவாறு தயாரித்துக் கொள்ளலாம்.

பதியப் பாத்திகளின் விதைகளை முளைக்க வைப் பதற்கு முன்னர் - அவற்றை கிருமிநாசினிகளில் ஊற வைத்து, விதைகளை தேவைக்கேற்றவாறு உபயோகிப்பதனால் கன்றுகள் அழுகுதல், செடி வாடுதல், மற்றும் அந்த்ரெக்னோஸ் ஆகிய கிருமிகளினால் ஏற்படும் நோய்களை தடுத்துத் கொள்ளலாம்.

பதியப் பாத்திகளில் விதைகளை 10-15 செ.மீற்றர் அளவு இடைவெளியுள்ள வரிசைகளில் போட்டு சிறிதளவு மண்ணினால் மூடவேண்டும். சுத்தமான வைக்கோல் போன்றவற்றைப் பயன்படுத்தி பதியங்களை மூடிவிட வேண்டும். பின்பு தினந்தோறும் நீர் விநியோகிக்க வேண்டும்.

விதைகளை விதைத்து 5-6 நாட்களுக்குப் பின்பு பதியங்களை மூடிய வைக்கோல்களை நீக்கிவிட வேண்டும். விதைகள் விதைத்து 8-10 நாட்களில் சகல விதைகளும் முளைத்துவிடும்.

முற்றாத (பிஞ்சு) கன்று களை மழையிலும், அதிக சூரிய ஒளியிலும் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக, மழையில் நனையாத படியும் மற்றும் சூரிய ஒளி படாதவாறும் மூடிவைத்துக்கொள்ள வேண்டும்.

பதியங்களிலிருந்து எடுத்துப் பாத்திகளில் முளைக்க வைப்பதற்கு முன்னம் கனறுகளை பெரிதாக்கிக் கொள்ளவேணடும். அதற்காக நிலங்களில் முளைக்க வைப்பதற்கு 10 நாளைக்கு முன்பு, கன்றுகளுக்கு நீர் விநியோகிக்கும் காலத்தை அதிகரித்து, மூடி இருக்கும் பொலித்தீனோ அல்லது வைக்கோல்களையோ நீக்கிவிடவேண்டும். பின்பு 21 நாட்கள் சென்ற கன்றுகளை தெரிவுசெய்து நிலத்தில் ம்ளைக்க வைக்கலாம்.

**பயிர்களை பயிரிடும் இடைவெளிகள்**

சீ.ஏ.8 40x40 செ.மீற்றர் அளவிலும்,

ஹங்கேரியன் யெலோ வெக்ஸ்:- 15x30 செ.மீற்றர் அளவு இடைவெளிகளிலும் கன்றுகளை நடவேண்டும்.

**நீர் விநியோகித்தல்**

பயிரிட்ட ஆரம்ப காலத்தில் 4-5 நாட்களுக்கு ஒருதடவையும், பின்பு வாரத்துக்கு ஒரு தடவையும் நீர் விநியோகிக்கவேண்டும். மழைக்கு ஏற்றவாறு நீர் வநியோகம் செய்ய வேண்டும். உரம்போடுவதற்கு முன்பும், பின்பும் நீர் விநியோகம் செய்வது அத்தியாவசியமாகும்.

மிளகாய்ச்செடியில் பூ பூக்கும்போதும், மிளகாய்கள் காய்க்கும்போதும் நீர் விநியோகம் செய்வது குறைந்தால், பூக்களும், மிளகாய்களும் மரத்திலிருந்து விழுந்துவிடும். இதனால் அந்தச் சந்தர்ப்பத்தின்போது மண்ணுக்கு ஏற்ற ஈரத்தன்மையை வைத்துக் கொள்வது நல்லது.

**களைகளை வளராமல் தடுத்தல்.**

கன்றுகளை பயிரிட்டு இரு வாரங்களுக்கு பின்பு, செடியின் அடியில் மண்ணைச்சேர்த்து, புற்களை நீக்கிவிடவேண்டும். இதனால் செடிகள் சிறப்பாக வளரும்.

பயிரிட்டு 2,4 ஆவது வாரங்களிலும், 8 ஆவது வாரங்களிலும் புற்களை நீக்கி விட வேண்டும்.

**பயிர்களைப் பாதிக்கும் நோய்களும் தடுக்கும் முறைகளும்**

சில சமயங்களில் தண்டுகளும், வேர்களும் கறுப்பு நிறமாக மாறி, அழுகி கன்றுகள் வாடிவிடும். கிருமிநாசினிகளை உபயோகித்து நன்றாக பதியங்களைப் பராமரிப்பதனாலும் மற்றும் நீர் விநியோகம் அதிகரிப்பதனாலும் இந்த நோயைத் தடுத்துக் கொள்ளலாம்.

**அந்த்ரெக்னோஸ் நோய்**

பூவின் காம்பு, பூக்களின் பகுதிகள் மற்றும் களைகளின் நிறம் மாறும். மிளகாய்களில் செம்மண் நிறமான புள்ளிகள் ஏற்படும். இந்த நோய் - செடி முழுவதும் பரவிய பின்பு மரம் வாடிவிடும். செடியில் நோய் ஏற்பட்டுள்ள பகுதிகளை பிடுங்கி எாிதது, பின்பு கிருமிநாசினிகளைத் தெளிப்பதனால் நோயை வராமல் தடுத்துக்கொள்ளலாம்.

**செடி வாடும் நோய்**

செடியின் வேர்களும், தண்டுகளும் அழுகி செடி வாடிவிடும். செடிகளை மாற்றுவதாலும், நீர் விநியோகத்தை அதிகரிப்பதாலும் இந்த நோயைத் தடுத்துக்கொள்ளலாம்.

**செடியின் இலைகள் சுருளுதல்**

'வெள்ளை இலையான்', 'மைட்டா வண்டு' ஆகிய கிருமிகளின் பாதிபபினால் செடியின் இலைகள் சுருளும். தகுந்த கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி, இந்த நோயைத் தடுத்துக் கொள்ளலாம்.

**மா பூஞ்சணம் பிடிக்கும் நோய**

இந்த நோயை தடுப்பதற்கு 7 நாட்களுக்கு அல்லது 14 நாட்களுக்கு ஒரு தடவை கிருமிநாசினிகளைப் பயன்படுத்த வேண்டும்.

**இலைகளில் புள்ளி விழும் நோய்**

இந்த நோயைத் தடுப்பதற்காக, அந்த்ரெக்னோஸ் தடுக்கும் முறையையே பயன் படுத்தலாம்.

**விளைச்சலைப் பெறுதல்**

முளைக்க வைத்து 75 நாட்களுக்கு பின்பு முதல் விளைச்சலைப் பெறலாம்.

**சீ.ஏ.8**

ஈரவலயத்தில் ஹெக்ரெயர் ஒன்றில் 6000-8000 கிலோகிராம் விளைச்சலைப் பெறலாம். 8-10 தடவைகளில் விளைச்சலைப் பெறலாம்.

உலர்வலயப் பிரதேசங்களில் ஒரு ஹெக்டெயருக்கு 10,000-15,000 கிலோகிராம் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். 8-12 தடவைகள் விளைச்சலைப் பெறலாம்.

**ஹங்கேரியன் யெலோ வெக்ஸ்**

விளைச்சலை 3-4 தடவைகளில் பெற்றுக் கொள்ளலாம். ஹெக்ரெயருக்கு 10,000-15,000 கிலோகிராம் விளைச்சலைப் பெறறுக்கொள்ள முடியும்.

விளைச்சலைப் பெற்ற பின்பு விரைவாக விற்பனைக்கு அனுப்பவேண்டும். இங்கு நன்றாக காற்றுப்படக்கூடியவாறு ஓட்டை உள்ள பிளாஸ்டிக் பெட்டிகளிலோ அல்லது பைகளிலோ வைக்கவேண்டும். மேலும் குளிர்சாதனப் பெட்டிகளில் பலகாலம் வைத்துக் கொள்ளலாம்.

## கறிமிளகாய் 100 கிராமில் அடங்கியுள்ள போஷாக்குகள்

| | |
|---|---|
| நீர் | - 92.4 கிராம் |
| சக்தி | - 24 கிலோ கலரி |
| புரதம் | - 1.3 கிராம் |
| எண்ணைச்சத்து | - 0.3 கிராம் |
| காபோவைதரேற்று | - 4.3 கிராம் |
| கல்சியம் | - 10 மி.கிராம் |
| பொஸ்பரஸ் | - 30 மி.கிராம் |
| இரும்புச்சத்து | - 1.2 மி.கிராம் |
| கெரொட்டீன் | - 427 மைக்ரோ கிராம் |
| தைமீன் | - 550 மைக்ரோ கிராம் |
| ரைபோசப்லேவின் | - 50 மைக்ரோ கிராம் |
| தைசீன் | - 0.1 மி.கிராம் |
| விட்டமின் சீ | - 137 மி.கிராம் |

– சசி சந்திரகாசன்

# தொழில்துறை மாற்றங்கள் வளர்ச்சிக்கு உதவவேண்டும்

இன்று நாடுகள் ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தொழில்துறை பல மாற்றங்களை உள்வாங்கி வளர்ந்து வருகிறது. இதனால், ஒரு நிறுவனம் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு தன்னையும் மாற்றவேண்டிய தேவை எழுந்துள்ளது.

மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாத, உள்வாங்காத நிறுவனங்கள் தங்களது இடங்களைத் தக்கவைக்க முடியாமல் போகுமென்பதை, பல பெரிய நிறுவனங்களின் வீழ்ச்சி எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. அதேநேரம் சில சிறிய நிறுவனங்கள், பெரிய நிறுவனங்களாக மாறியமையும் கண்கூடு.

இதற்குக் காரணம் அவை தம்மைச் சுற்றி நிகழ்ந்த மாற்றங்களின் தாக்கத்தை எதிர்கொண்டு, மாற்றங்களுக்கேற்ப தம்மை வளர்த்துக்கொண்டமையாகும்.

உண்மையில் மாற்றமானது வளர்ச்சிக்கு உதவவேண்டும். அவ்வாறில்லை யெனில் மாற்றத்தால் பயன் இல்லை. ஆகவே மாற்றமானது -

- **அடிப்படைக் கட்டமைப்பை மாற்றக்கூடியதாக இருக்கவேண்டும்.**
- **நல்ல விளைவுகளைத் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.**
- **இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.**
- **வேறுபாடுகளைக் குறைப்பதாக இருக்கவேண்டும்.**

அதேநேரம் எவ்வாறு மாற்றங்கள் தவிர்க்க முடியாதவைகளோ அவ்வாறே அதற்குரிய எதிர்ப்புகளும் தவிர்க்க முடியாதது என்பதனை நிறுவன முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். பொதுவாக ஆரம்பத்தில் ஒரு நிறுவன பணியாளர்கள் மாற்றத்தை ஏற்று க்கொள்ள மறுப்பார்கள். இதற்குக் காரணம் -

- வேலைப்பழு
- பழகிக்கொண்ட ஒரு விடயத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது இலகு என்ற மனப்போக்கு.
- மாற்றம், தமது பதவி, அதிகாரம் போன்றவற்றுக்கு எதிரானது என்ற எண்ணம.
- நாளாந்தம் தனிப்பட்ட வேலைகளைப் பாதிக்கும் எனக் கருதுவதாகும்.

எனவே, ஒரு முகாமையாளர் இவற்றினைக் கருத்திலெடுக்காமல், உடனடியாக மாற்றங்களை செயற்படுத்தும்பொழுது சிக்கல்கள் எழ வாய்ப்புண்டு. ஏனெனில், பணியாளர்கள் பழக்கப்பட்ட விடயங்களிலிருந்து புதிய விடயங்களுக்கு மாற கால அவகாசம் தேவைப்படும்.

அதனால், முதலில் பணியாளர்களுக்கு மாறுதலுக்கான தேவையை உணரச் செய்ய வேண்டும். அவற்றால் ஏற்படும் நன்மைகளை விளக்கவேண்டும். எல்லோருக்கும் தெரியப்படுத்தவேண்டும். நிறைவேற்றும் முறைபற்றிக் கலந்துரையாட வேண்டும்.

இவ்வாறு நடப்பதன்மூலம், பணியாளர்களே மாற்றத்தை விரும்பும் நிலையை உருவாக்கவேண்டும். மாறுதல்கள் நிறுவன வளர்ச்சிக்கும், பணியாளர்களின் மேம்பாட்டுக்கும் இன்றியமையாதது என்று உணரும்போது, அவர்களுடைய எதிர்ப்புணர்வு மறையும்.

இங்கு மாறுதலை அறிமுகப்படுத்துவதில், காலமறிதல் ஒரு முக்கியமான காரணியாகும். காலமறிந்து மாறுதலைக் கொண்டுவரின், அது ஏற்கப்படும். புதிய சிக்கல்கள் எழ வாய்ப்பிராது. ஜப்பானிய முகாமைக் கருத்துகளில் - 'வேர்ப்பிடிப்புக் கோட்பாடு' என்ற ஒரு கோட்பாடு உண்டு. அதில், ஒரு செடியை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றிவைக்க வேண்டும் என்றால், அந்தச் செடியை - வேர் மண்ணுடன் எடுத்து, வேறு இடத்தில் நடவேண்டும். ஒரு சிறு வேரும் அறுந்துவிடாமல் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

இதனால், அந்தச் செடி புதிய இடத்தில் மிக இலகுவாக வளரத் தொடங்குகிறது. இது போன்றே ஒரு நிறுவனத்தில் மாற்றம் கொண்டுவரும்பொழுது அதில் பணியாற்றும் அடிமட்டத் தொழிலாளர்வரை - மாற்றத்தின் நோக்கம், பயன், தேவை ஆகியவற்றைக் குறித்து விளக்கி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, அதன் பின்னர் மாற்றத்தைக் கொண்டு வந்தால், வெற்றியடைய முடியும் என்பதை இந்தக் கோட்பாடு விளக்குகிறது.

எனவே, எந்த நிறுவனம் மாற்றங்களில் சிறந்து விளங்குகிறதோ, அதன் வளர்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதும், மாற்றங்களை உருவாக்கும் நிறுவனமும், அதனுடைய துறையில் முதன்மையிடத்தைப் பெற்று விடும் என்பதும் வெளிப்படை.

**செய்திக் கட்டுரை** - அஸ்மிதா

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் தனியாக பிரதேச சபையொன்று உருவாகவேண்டும்



வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கென தனியான பிரதேச சபை உருவாக்கப்படாததன் காரணத்தினால், இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகப் பொது ஸ்தாபனங்கள் மற்றும் அந்தப் பிரதேச மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

ஒரு பிரதேசசபையின் கீழ் இரண்டு பிரதேச செயலர் பிரிவு அடங்கியிருப்பதால் வளங்கள் பங்கிடப்படும்போது வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதி பருத்தித்துறைப் பிரதேச சபையின் ஒரு பகுதியாகவே தொடர்ந்து இருந்து வருகின்றது. செம்பியன்பற்று உப அலுவலகம், குடத்தனை உப அலுவலகம் ஆகியன வடமராட்சி கிழக்குப் பகுதியின் பிரதேசசபைக்கான அலுவலகங்களாகும். பருத்தித்துறை பிரதேச சபையே இவற்றை கட்டுப்படுத்தும் அலுவலகமாக இயங்கி வருகின்றது.

**வடமராட்சிக் கிழ்க்கிற்கென தனியான பிரதேசசபை உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே வைக்கப்பட்டன. சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு, மீள் குடியேற்றம் நடைபெற்ற பின்னர் மருதங்கேணியில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அரச அதிபர்கள், புலிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது**

2000 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் பின் இந்த உபஅலுவலகங்களின் செயற்பாடுகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இரண்டு உப அலுவலகங்களும் சொந்த இடங்களில் இயங்காமல், வேறு இடங்களிலேயே இயங்கி வருகின்றன.

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உபஅலுவலகம் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளது. சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தி அரச அலுவலகங்கள் மற்றும் பல்வேறு திணைக்களங்களுக்கு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுவரும் இவ்வேளையில், இக்கட்டடம் இன்னமும் புனரமைக்கப்படாமல் இருப்பது குறித்து இப்பிரதேச மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

இந்த உப அலுவலகம் செம்பியன்பற்று தெற்கில் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகின்றது. இதன் நிர்வாகத்தில் செம்பியன்பற்று பொதுநூலகம் இன்னமும் இயங்கவில்லை. 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பொது நூலகம் மக்களுக்குப் பயன்படும் வகையில் இயங்கி சேவையாற்றிவந்தது. பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் இந்த நூலகத்தை பயன்படுத்தி வந்தனர்.

தற்போது இந்தப் பிரதேசத்தில் மக்கள் முழு அளவில் மீளக் குடியேறியுள்ளனர். பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டு, இயங்கி வருகின்ற பாடசாலைகளில் நூலகங்கள் இல்லை. இந்தக் குறைபாட்டை முன்னர் இந்தப் பொதுநூலகமே நீக்கிவந்தது. தற்போது இந்த செம்பியன்பற்று கல்விச் சமூகம் கவலை கொண்டுள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் இந்தப் பொதுநூலகத்தினைச் சொந்த இடத்தில் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடுத்து பிரதேச சபையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வடமராட்சிக் கிழக்குப் பகுதியின் பொதுச் சந்தையாகிய மருதங்கேணிப் பொதுச்சந்தை, போரின் தாக்கங்களினால் இன்னமும் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. இந்தப் பொதுச்சந்தையைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், எவ்வித புனரமைப்பு வேலைகளும் செய்யப்படவில்லை. இந்தப் பொதுச் சந்தை, வாரத்தில் மூன்று நாட்கள் இயங்கி வருகின்றது. பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தில் விவசாயிகள் தமது பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக இந்தச் சந்தைக்கு வருகின்றனர். வெயிலில் நின்றபடியே இவர்கள் மரக்கறி வகைகளை விற்பனை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. மாசார், சோறன்பற்று, முகாவில் பகுதி மக்களே சந்தைப்படுத்துவதற்கா்க இந்தப் பொதுச்சந்தைக்கு வருகின்றனர்.

குடத்தனை உப அலுவலகத்தைப் பொறுத்தவரை அதற்கு இன்னமும் பொறுப்பதிகாரி நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் முன்னர் மாமுனை, நாகர்கோவில ஆகிய இடங்களில் ஆயுர்வேத மருந்தகங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்குச் சேவையாற்றி வந்தன. இவை பருத்தித்துறை பிரதேச சபையினாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. சுகாதார வசதிகள் மிகவும் குறைந்த வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் இந்த ஆயுர்வேத மருந்தகங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்காதது குறித்து, மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.



இந்தப் பிரதேசத்தில் பெரும்பாலான வீதிகளின் புனரமைப்பினை பிரதேச சபையின் ஊடாகவே நிறைவேற்ற வேண்டியுள்ளது. கல்லினால் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள் பல உள்ளன. களி, ஊரி என்பன போட்டு அமைக்கவேண்டிய வீதிகள் உள்ளன. பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்படவேண்டிய பல வீதிகளும் உள்ளன.

போக்குவரத்துச் சீராக அமைந்தால் தான் ஒரு பிரதேசம் அபிவிருத்தி அடைய முடியும். இந்த வகையிலான சுமார் 40 வீதிகள் இந்தப் பிரதேசத்தில் புனரமைக்கப்படவேண்டியுள்ளது.

பிரதேச சபை உப அலுவலகங்களின் சேவைகள் சீராக நடைபெறாமல் உள்ள போது இந்த வீதிகள் எவ்வாறு புனரமைக்கப்பட முடியும்? இருந்தும் பருத்தித்துறை பிரதேச சபையின் ஊடாக மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் சீர்செய்ய வேண்டுமெனின் வடமராட்சிக் கிழக்குக்கென தனியான பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும். **அடுத்த கேள்வி இதனை உருவாக்குவது யார்?**

வடமராட்சிக் கிழக்கிற்கென தனியான பிரதேசசபை உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் பல ஆண்டுகளுக்கு முன்னரே வைக்கப்பட்டன. சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு, மீள்குடியேற்றம் நடைபெற்ற பின்னர் மருதங்கேணியில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அரச அதிபர்கள், புலிகளின் பிரமுகர்கள், கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வப்போது கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றனவே ஒழிய அவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றனவா? என்பது கேள்விக்குறியே. அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும், பொதுஸ்தாபனங்களும் ஒருமித்துக் குரல் கொடுக்கும் பட்சத்திலேயே இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியும். சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்ச்சியாக தொடர்பு கொள்ளவேண்டும். அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். எனவே, இந்த விடயத்தில் உரியவர்கள் சமூக மேம்பாடு கருதி இந்த நடவடிக்கையை முன்னெடுக்க முன் வர வேண்டும். வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டால்தான் வடமராட்சிக் கிழக்கிற்கென தனியானதொரு பிரதேச சபை உருவாகும் என்ற கருத்தும் நிலவுகின்றது. ஆனால், இதற்கு அண்மையில் உள்ள பளை - உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவே உள்ளது. அதற்கு என ஒரு தனியான பச்சிலைப்பள்ளி பிரதேசசபை ஒன்று உள்ளது. அதேபோல் நெடுந்தீவும் பிரதேச செயலகமாக இன்னும் மாறவில்லை. உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவே உள்ளது. ஆனால், அதற்கென ஒரு தனியான பிரதேச சபை இயங்கி வருகின்றது.

இருந்தும் வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவை, பிரதேச செயலகமாக மாற்ற வேண்டியது அவசியமானதும் அவசரமானதும் ஒன்றுதான்.

மாவட்டத்தில் செயலகங்களின் பெரும்பாலான பணிகள் பிரதேச செயலகங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், பிரதேச செயலகம் எமது பிரிவில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆனால் எமது உதவி அரசாங்க அதிபர் பணிமனை இன்னமும் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படவில்லை. எமது உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒரு தனியார் வீட்டில் எந்தவித வசதிகளும் இல்லாமல் சில ஊழியர்களுடன் மட்டும் இயங்கி வருகின்றது. முழுமையான ஆளணிகள் இன்றி, கணினி வசதிகள் எதுவுமின்றி பல சிரமத்தின் மத்தியில் செயலாற்றுகின்றது. எனவே, சகல வசதிகளும் கொண்ட ஒரு பிரதேச செயலகத்தை இங்கு நிறுவி ஆளணிகளையும் முழுமையாக அமர்த்த வே டும். இந்தப் பிரதேசம் முழுமையான மீள்குடியேற்றப் பகுதியாக இருப்பதனால் மிக அவசியமாக இந்தத் தேவை நிறைவு செய்யப்படவேண்டும்.

வடமராட்சிப் பிரதேசத்தில் - பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலங்களுக்குப் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வன்னிப் பிரதேசத்தின் - கண்டாவளை, பளை போன்ற இடங்களிலும் பிரதேச செயலகத்திற்கென புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் எமது உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு இன்னமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கட்டடம் அமைப்பதற்கு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

'சுவர் இருந்தால் தான் சித்திரம் கீற முடியும்' எனவே வசதியான ஒரு நிரந்தரக் கட்டடம் எமது உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு தேவையாக உள்ளது.

எனவே, வடமராட்சி கிழக்குக்கென ஒரு தனியான பிரதேசசபை உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட வேண்டும். இந்தப் பிரதேசத்தின் நன்மை கருதி அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இவற்றை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதே வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் வேண்டுகோளாகக் காணப்படுகிறது.

122

## ஒரு நிமிடம் சிந்திப்போம்!

நோயாளரைப் பார்க்கச் செல்வோர் ஒருபோதும் நோயாளிகளின் மனம் வருந்தும்படி உரையாடல்களை மேற்கொள்ளக்கூடாது.

பொதுவாக நோயாளர் நோயினால் துன்புற்று மனம் ஒடிந்து போவதிலும் பார்க்க நோய் பார்க்க வருவோரின் ஆலோசனைகள் மருத்துவ முறைகள் போன்றவற்றால், துன்புறுவது அதிகம். இதனால், நோயாளிகள் - வைத்தியரின் ஆலோசனைகளைத் தட்டிக் கழித்துக் கொள்ளும் நிலையும் ஏற்படுகின்றது.

• எப்போதுமே நோயாளிகளைப் பார்க்கச் செல்லும்போது ஆறுதல் வார்த்தைகளையும், நம்பிக்கையூட்டும் வார்த்தைகளையும் கூறவேண்டும். அவர்களின் நோய் குறித்த தேவையில்லாத விருப்புக்களைக் கேட்பதைத் தவிர்த்தல் மிகவும் நன்று.

வைத்தியர்கள் கூட நோயாளிகள் மீது மிகுந்த அக்கறையோடு கவனிப்பைச் செலுத்திக்கொள்ளவேண்டும். வெடுசுடு என்றிருக்காது அவர்கள் மீது கரிசனையாக அவர்கள் சொல்வதைச் செவிமடுத்து வைத்தியத்தினை மேற்கொள்ளவேண்டும். அப்போது நோயாளிகளுக்கு வைத்தியர் மீது நம்பிக்கை பிறக்கும்.

வைத்தியர்கள் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது நோயாளிகள் முகத்தை ஆர்வத்துடன் இனிமையாக நோக்கி அவர்கள் சொல்வதைத் தலையசைத்துக் கேட்பதாகும். அப்போது நோயாளிக்கு நம்பிக்கை தோன்றும். சிலவேளை, அரைவாசி நோய்கூட அதிலேயே மாறிவிடும். அத்துடன் நோயாளிக்குக் கடுமையான நோய் இருந்தாலும் அதனை எடுத்துச்சொல்லக்கூடிய விதத்தில் தன்மையாகத் தெரியப்படுத்த வேண்டும்.

நோயாளிக்குத் தன்மீது நம்பிக்கை கொள்ளச்செய்வது மிகச் சிறப்பான பணி. இதனால்தான் மருத்துவ இதழியலாளர் டாக்டர் டபிள்யூ.ஜிப்.போர்டு ஜோன்ஸ் 'நம்பிக்கை - வலிமைமிக்க சிகிச்சை' என்று கூறுகின்றார் இவர்.

தீராத வியாதியால் அவதியுறும் நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட உணர்ச்சிபூர்வ ஆதரவு எந்தளவு பயனளிக்கும் என்பதன் பேரில் நடத்தப்பட்ட பல்வேறு ஆராய்ச்சிகளை மறுபரிசீலனை செய்தார். அதில் இப்படிப்பட்ட ஆதரவு அதிக நம்பிக்கையான மனநிலையைக் காத்துக்கொள்ள அவர்களுக்கு உதவி செய்வதாகக் கருதப்படுகின்றது என்றார்.

1989 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியில் இத்தகைய ஆதரவு அளிக்கப்பட்ட நோயாளிகள் நீண்ட காலம் உயிர் வாழ்ந்ததாக கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், சமீப காலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலேயே அதிக உறுதியான முடிவெடுக்க முடியவில்லை. என்றாலும், உணர்ச்சிபூர்வ ஆதரவைப் பெறும் நோயாளிகள் அப்படிப்பட்ட ஆதரவைப் பெறாத நோயாளிகளைவிட குறைந்தளவு மனச்சோர்வோ, வேதனையோதான் அடைகின்றனர் என்பதை ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

எனவே, நோயாளிகள் மற்றவர்களினால் ஆதரவு பெற்றவர்களாக அவர்களினால் நம்பிக்கையூட்டப்படுபவர்களாக இருக்கவேண்டும். அப்போது நோயாளிகள் நோயிலிருந்து விடுபட முடியாவிட்டாலும், மனச் சோர்வின்றி மகிழ்வாக வாழமுடியும்.

ஒருவருக்குத் தன்மீதான நம்பிக்கை இழக்கப்படுகின்றபோது மனச்சோர்வு ஏற்படுவது இயல்பு. இதனால், நம்பிக்கை ஊட்டவேண்டிய பொறுப்பு எமக்குண்டு. நோயாளிகளைத் தரிசிக்கின்ற போது இதனைக் கவனிக்கவேண்டியது அவசியம். எனவே, எம் உரையாடல்கள் மிக நுணுக்கமாக ஆரோக்கியமாக அமையவேண்டும். சிந்திப்போம்.... செயற்படுவோம்...!

- யாழ். ராதவல்லி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழர்களாகச் சிந்தியுங்கள்.....!

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப்பகுதி எவராலும் சீண்டுவாரற்ற பயத்தையும், பீதியையும் ஏற்படுத்தும் பற்றைகள் மண்டிய ஒரு பரந்த மயான பூமியாகவே இருந்தது.

ஆனாலும் அந்த மண் சுமந்திருந்த வேதனையும், துயரமும், அவலமும் நிறைய எமது மக்களின் கதைகள் ஏராளம்.

சிங்களப் பேரினவாதம் எமது மக்களுக்கு எதிராக கட்ட விழ்த்து விட்டிருந்த கொடிய யுத்தம் எங்கள் தாயகமண்ணை எவ்வாறெல்லாம் அதன் அடையாளமறச்சிதைத்து, எமது மககளை ஏதிலியராக்கி இடம்பெயர்ந்து, கடல் கடந்து மரண அச்சத்துடன் வன்னி மண்ணில் அடர் காடுகளின் பாதுகாப்புக் குள் தஞ்சமடைந்து உயிர்ப் பாதுகாப்பைத் தேடவைத்தது என்பது ஒரு நெடிய - நெஞ்சம் மறக்கவே முடியாத கொடிய வர லாறாகும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் கடந்த மூன்று தசாப்த காலமாக கடந்து வந்த பாதையெங்கும் அவர்கள் சிந் திய கண்ணீரும், செந்நீரும் அவர்கள் தாயக மண்ணை சுதந் திர உயிர்ப்புக் கொள்ளவைத்தாலும், அந்த மண்ணின் ஒவ் வொரு துகளும் சோகம் சுமந்த செய்திகளை தன்னுள் அடக் கியவாறு அன்றாடம் நெடுமூச்சு விட்டுக்கொண்டே சுதந்திர தாகத்துடன் விடுதலை நாளுக்காக ஏங்கிக்கிடப்பதை தங் கள் தயாகத்துக்கு மனதறிந்தோர் அறிவர்.

வான்பரப்பில் வட்டமிட்டு இரைந்து உலாவிய இயந்திரக் கழுகுகள் கக்கிய தீக்குண்டுகளால், எமது சொந்தமண்ணில் உடல் சிதறிப்பலியான எமது சோதரர்களின் உதிரம் உறைந்த மண் இன்னமும் அந்த வரலாற்று அவலங்களை தாங்கி மௌ னத்துயரம் அனுஷ்டித்துக்கொண்டேயுள்ளது. பௌத்த சிங் கள பேரினவாதத்தின் தீராத இரத்த வெறிக்கு இலக்கான மனித உயிர்களுக்குள் பால், இன, வயது வேறுபாடு என்பதே கிடை யாது.

இன்று நமது கால்பதியும் இடமெங்கும் ஏதோ ஒரு , நமது சகோதர உயிர் என்றோ வீழ்ந்து மடிந்து தனது இறுதி மூச்சை விட்டிருக்கலாம். அந்த மக்களின் இறுதிமூச்சு இன்னமும் கூட காற்றில் கலந்து எம்மூச்சுள் உறைந்து, மீண்டும் மீண்டும் சுற் றிக் கொண்டுமிருக்கலாம்.

நாம் திரியும் எமது மண்ணின் திசையெங்கும் சிங்களப் பேரி னவாதத்தின இரத்தப் பசிக்கு இரையான மனிதர்களின் கதை கள் மண்டிக் கிடக்கின்றன.

அவர்கள் எம்மவர்கள், எம்முறவுகள், எம் நட்புக்கும் பாசத் திற்கும் உரியவர்கள், மிக மிகச் சாதாரணமான அப்பாவி மனிதர்கள் ஆயுதபாணிகளல்ல.... ஆனால், ஆயுதபாணிக ளால் அவலத்திற்குள்ளாக்கி அலங்கோலப்படுத்தப்பட்டவர் கள்

அவர்கள் செய்த ஒரே குற்றம் அவர்கள் தமிழர்களாக பிறந்ததுதான்....

**1996** இன் ஆரம்பத்தில் சிங்களப்படை குடாநாட்டை முழு மையாக ஆக்கிரமித்ததும், அது செய்த அட்டூழியமும், அராஜக மும் பௌத்த தர்மத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்டதால்தான் அவற்றை மேற்கொண்ட இராணுவத்தினருக்கு பௌத்தமத பீடங் கள் வாழ்த்தும் ஆசியும் வழங்கினபோலும், அந்த ஆக்கிரமிப்பு இராணுவம் குடாநாட்டில் 'மனங்களையும், அறிவையும்' வெல்லுதல் (Winning Hearts and minds) என்ற பெயரில் மேற்கொண்ட உளவியல் நடவடிக்கையின் தன்மை என்ன என்பதற்கு அதன்போது காணாமல்போன எமது மக்களின் நீண்டபட்டியலே போதுமான சான்றாதாரமாகும்.

காணாமல்போன அந்த நபர்கள் புலிகளல்ல... இராணுவ ஆக்கிரமிப்புப்பகுதிக்குள் அவர்களை நம்பி வாழவந்த அப்பாவி மக்களே.... அவர்களுக்கு என்னதான் நடந்தது என்ற கேள் விக்கு செம்மணியே நிதர்சனமான சாட்சி.

இலங்கையரசும், இராணுவமும் அவர்களை என்ன செய் தது என்பதை விளக்கவேண்டியதேயில்லை.... அது உலக றிந்த கொடுமை.

செம்மணியில் முன்னர் ஓர் சிறிய மயானம்தான் இருந்தது.

ஆனால், செம்மணி முழுவதையுமே இடுகாடாகமாற்றிய பெருமை இலங்கை இராணுவத்தையே சேரும். காணாமற் போனோரின் கதைகளை வக்கிரபுத்தி கொண்ட படையினர் அங்கு தான் முடித்து வைத்தார்கள் என்பதற்கு வேறு சான்றா தாரங்களை விடவும் ராஜபக்ஷவின் சாட்சியமே போதுமானது.

அங்கு தோண்டி எடுக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்ட சடலங்களைவிடவும் அடையாளம் காணவே முடியாது அழித்து நிர்மூலமாக்கப்பட்ட உடல்களே அதிகம்.

எரியூட்டியும், புதைக்கப்பட்டும் அந்த பரந்த செம்மணி வயல வெளிக்குள் காணாமற்போகச்செய்யப்பட்டோரின் ஆத்மாக்க ளின் அவலக்குரல்கள் அந்த காற்று வெளியில் இன்னமும் அலைந்து கொண்டுடிருக்கவும் கூடும்.

இடம்பெயர்ந்த வன்னியில் நிலைகொண்டு வரலாறு படைத்த தமிழ் வீரர்கள், சமாதான சூழலில் குடாநாட்டுக்குள் காலடி வைத்தபோது முதலில் அந்த செம்மணி மண்ணினைத் தொட்டு வணங்கி அஞ்சலி செலுத்தி நிமிர்ந்து துளிர்க்கும் கண்ணீரு டன் கம்பீரம் காட்டியபோது, சிலிர்த்துப் போனது அந்தமண் மட்டு மல்ல முழுத்தமிழ் மக்களும் தான்....!

சமாதானம் - இந்த இரண்டரை ஆண்டுக்குள் எமது மக்க ளுக்கு ஏமாற்றத்தைதவிர வேறெதையும் கொண்டுவரவில்லை.

செம்மணிக்குள் எரியூட்டியும், புதைக்கப்பட்டும் காணாமல் போன மக்களுக்கு எந்த நினைவுச் சின்னமும் கிடையாது.

ஆனால், எமது மண்ணை தமது வர்த்தகச் சந்தையாக்கி சுரண்டும் தென்பகுதி நிறுவனங்களின் விளம்பரப்பலகைகள் செம்மணிப் பகுதியை குனிந்து பார்த்து அஞ்சலி செலுத்த விடாது கவர்ச்சி காட்டி நிமிர்ந்து பார்க்கச் செய்யும் முயற்சியில் வெற்றி கண்டுவிட்டதாகவே தெரிகிறது.

செம்மணிப்பகுதி - வணக்கத்திற்கும், அஞ்சலிக்கும் உரிய பிரதேசம். இன்று குடாநாட்டு மக்களின் குப்பைத் தொட்டியாகி விட்டது.

நாம் என்ன செய்கிறோம்? எமது வரலாற்றையே மறந்து விட்டோமா? எரியூட்டப்பட்ட நூலகத்தின் எரியுண்ட அடையாளம் ஏதுமின்றி புத்துருக் கொடுத்து கைதட்டி ஆரவாரம் செய்கின் றோம்.

நாம் எல்லாவற்றையும் மறக்க விரும்புகின்றோமா? மறைக்க விரும்புகின்றோமா? புரியவேயில்லை.

எமது வரலாற்றின் காலப்பதிவுகளுக்கும், எச்சங்களுக்கும் மதிப்பளித்து பாதுகாக்க தவறுகிறோம் போலுள்ளது.

செம்மணியில் தமிழ் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா என்ற 'சக்தி'மிக்க நிறுவனத்தின் விளம்பரப்பலகை கிழிந்து தொங்குகிறது. அது தமிழ் மக்களின் இன்றைய நிலையை காட்டுவது போலுள்ளது.

செம்மணிப்பகுதி இன்னொரு துயிலுமில்லப் பிரதேசமாக மதிக்கப்படவேண்டும் என்பதை, எமது மக்களுக்கு சொல் லியுணர்த்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளமை வெட்கப்படவேண் டிய ஒன்றேயாகும்.

இந்த விடயத்தில் பொறுப்புணர்வுடன் மட்டுமல்ல உணர் வெழிச்சியுடனும் சிந்திக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களே....!

## நாடும் நடப்பும்




பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# நெடுந்தீவு குறிகட்டுவான் படகு சேவை நேர அட்டவணை தயாரிப்பில் இழுபறி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான பயணிகள் படகுச்சேவையில் தற்போது ஈடுபடும் தனியார் படகு உரிமை யாளருக்கும், பலநோக்குக் கூ..சங்கத்தினருக்கும் இடையில் படகுச்சேவை கால அட்டவணை தொடர்பாக பெரும் இழுபறி அடிக்கடி ஏற்படுவதனால் பயணிகள் நலன் பெரிதும் பாதிக்கப் படுகிறது.

படகுச் சேவை தொடர்பான கால அட்டவணையினை யார் தயாரித்து நெடுந்தீவிற்கான போக்குவரத்தை சீர் செய்வது என்ற ஏக்கமே தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. நெடுந்தீவின் நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு பயணிகளுக்கான சீரான சேவையை நடத்தவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தற்போது சேவையில் ஈடுபடும் இரு படகுகளுக்குமான ஒரு கால அட்டவணை நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதும், அதனை செயற்படுத்தும் நாளிலே படகுகள் பழுதடைந்து தனியார் படகு மட்டுமே சேவை செய்தது. ஆனால் தற்போது பல.நோ.கூ.சங்கப் படகும் சேவையில ஈடுபடுவதனால ஏற்கனவே தயாரிக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய சேவையில் ஈடுபடுவதற்கு இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சீரான சேவை யினை மேற்கொள்ள உரிய கால நேர அட்டவணைகளை பொறுப் பான நிர்வாக அதிகாரிகள் தயாரித்து சீரான சேவையினைப் பெற வழிசமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

## தென்னிந்திய திருச்சபையின் இலவச ஆங்கில பயிற்சி வகுப்பு

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையினால் இலவச ஆங் கில டிப்ளோமா பயிற்சி நெறி நடாத்தப்படவுள்ளது. மாணவர் களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கில் சுமார் ஒன்றரைவருட கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இம்மாத நடுப்பகுதியில் திருச்சபை வளாகத்தில் ஆரம்பிக் கப்படவுள்ள இந்த வகுப்பின் மூலம் குடத்தனை பகுதி மாணவர்கள் பெரும் பயனை அடைவதுடன் ஆங்கில அறிவையும் வளர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்குமென குடத்தனை தென்னி ந்தியத் திருச்சபை வளாக அதிபர் அருட்திரு ராஜன் றொகான் தெரிவித்தார். (91)

## உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான சனியன்று அவசர கலந்துரையாடல்

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான அவசர கூட்டமொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை மண்டபத்தில் 12 மணிக்கு இடம் பெற வுள்ள இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி உதவியாளர் களுக்கான பயிற்சி நெறி மற்றும் அபிவிருத்தி தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்மாவட்டத்திலுள்ள பதினைந்து உள்ளூராட்சி உதவியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர் சங்கச் செயலாளர் செ.ரமேஸ் அறிவித்துள்ளார். (91)

# பாடசாலை மாணவர்களுக்கிடையே சித்திரப் போட்டிகளுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கிடையே சித்திரப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இச்சித்திரப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, ஆகியவற்றில் காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை தமது கல்வி வலயங்களுக்கு உட்பட்ட போட்டி நடைபெறும் பாடசாலைகளுக்கு, பொறுப்பாசிரியர் ஒருவருடன் அனுப்பிவைக்குமாறு திட்ட இணைப்பாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

வரைதல் போட்டிக்கான எழுது பொருட்கள் குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களில் வைத்து வழங்கப்படும் . இந்தப் போட்டிகளிலிருந்து தெரிவுசெய்யப்படுவோர் கோட்ட மற்றும் வலயமட்ட போட்டிகளுக்கு அனுப்பப்படுவர்.

## குடாநாட்டில் மழைநீர் சேகரிப்பதற்கு 12 இடங்களில் தொட்டிகள் அமைக்கப்படும்

இலங்கை மழைநீர் சேகரிப்பு மையத்தினால் யாழ். குடாநாட்டிலுள்ள பன்னிரண்டு பிரதேசங்களில் மழைநீர் சேக ரிப்பு தொட்டிகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

நகர்ப்புற பொதுவசதிகளை மேற்கொள்ளும் அமைச்சின் ஏற்பாட்டில், இலங்கையில் 100 இடங்களில் மழைநீர்த் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் யாழ்.மாவட்ட த்தில் சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, சங்கானை, ஊர்காவற்துறை, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழு வைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் இந்த மழைநீர் சேக ரிக்கும் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக மழைநீர் சேகரிக்கும் மையத்தினால் எதிர்வரும் 14 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் கலந்துரையாடலொன்றும், கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது. இவற்றைவிட மழைநீர் சேகரிப்புத் தொட்டி நிறுவுவது தொட ர்பாக தெரிவுசெய்யப்பட்ட மேசன்களுக்கு ஐந்து நாள் பயி ற்சி வகுப்பு யாழ். விவசாய பயிற்சி நிலையத்தில் நடாத்தப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வித்துடல் விதைப்பு

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியில் தேசவிரோதிகளின் த்தாக்குதலில் உயிரிழந்த மேஜர் தமிழ்நேசன் அல்லது முறிஞ்சன் மாமா (மண்டூர் காரைக்குடா) வின் வித்துடல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக விடுதலைப் புலிகளின் கொக்கட்டிச்சோலை நிர்வாகப் பணிமனையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட இவரின் வித்துடல் பின்னர் இவரது சொந்த இடமான மண்டூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளையடுத்து வித் துடல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற இறுதி அஞ்சலி நிகழ் வுகளையடுத்து மாலை 5 மணியளவில் வித்துடல் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்க ப்பட்டது.

# இருபது ஆண்டுகள் கழித்து

ஒவ்வொரு முறையும் விமானத்தில் ஏறி உட்கார்ந்ததும் எனக்குள் ஒரு ஐயம் ஏற்படும். இந்த இராட்சதப் பறவை எல்லோரையும் தூக்கிக்கொண்டு விண்ணில் பறக்குமா? இல் லையா? விமானத்தின் மடிக்குள் பயணிகள் போல் இரு மடங்குப் பொதிகள் வேறு. நிறுத்தால் பயணிகள்

> **சரியாக இருபது ஆண்டுகள் கழித்து பிறந்த மண்ணுக்குப் பயணம். இந்த இடைக் காலத்தில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள், துன்பங்கள், ..யரங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள், வெற்றிகள், தோல்விகள்...**

அளவு எடை வரும்.

விமானத்தை றைட் சகோதரர்கள் (**Wright, Orville and Wilbur**) கண்டுபிடித்து ஒரு நூற்றாண்டு நிறைவை 2003 ஆம் ஆண்டில் கொண்டாடினார்கள்.

இந்த றைட் சகோதரர்களின் முதல் விமானம் 12 நொடிகள்தான் பூமிக்கு மேலே பறந்தது.

பல ஆண்டு முயற்சி செய்து, டிசெம்பர் 17, 1903 ஆம் ஆண்டில் தங்களது 'பறக்கும் இயந்திரத்தை' வெள்ளோட்டம் விட்டார்கள். இதுவே



முதல் விமானப்பறப்பு முயற்சி

மனித வரலாற்றில் மோட்டார் சக்தி (12 குதிரை சக்தி) மூலம் விமானி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட பறப்பாகும்.

மீண்டும் நவம்பர் 9, 1904 ஆம் ஆண்டில் வில்பர் றைட் 5 நிமிடங்கள் பறந்து காட்டினார். செப்ரெம்பர் 17, 1907 ஆம் ஆண்டு முதல் விமான விபத்து ஏற்பட்டது. வில்பர் றைட் அந்த விபத்தில் தப்பினார். ஆனால், அதில் பயணம் செய்த பயணி ஒருவர் இறந்து போனார்.

1908 ஆம் ஆண்டில் அமெரிக்க அரசு முதன் முதலாக றைட் சகோதரர்களிடம் இருந்து ஒரு விமானத்தை வாங்கியது. அதன் விலை 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். ஆனால், அரசு ஊக்குவிப்பு கொடுப்பனவாக மேலதிகமாக 5 ஆயிரம் டொலர்களைக கொடுத்தது. காரணம் - அந்த விமானம் மணிக்கு 40 மைல் வேகத்துக்கும் மேலாகப் பறந்ததுதான்.

இன்று விமானங்கள் ஒலியை விட வேகமாக (758 மைல்கள் அல்லது 1,220 கி.மீ.) விண்ணில் பறக்கின்றன. விரைவில் 300 பயணிகளு



குருகுலம் இனிய வாழ்வு இல்லம்

டன் மணிக்கு 6,482 மைல் வேகத்தில் பறக்கும் விமானங்கள் பயன்பாட்டுக்கு வர இருக்கின்றன!

போர் வெறிகொண்ட நாடுகள் றைட் சகோதரர்களது அறிவியல் கண்டுபிடிப்பை யுத்தத்தின் அழிவுக்கு பயன்படுத்தப்படுவது அவர்கள குற்றமில்லை.

மருத்துவர்கள் கையிலுள்ள கத்தி உயிரைக் காக்கும். மாடு வெட்டுகிறவன் கையிலுள்ள அதே கத்தி உயிரைக் குடிக்கும்.

விமானத்தில் பறக்கிறவர்களில் எத்தனை பேர் அதனைக் கண்டு பிடித்த றைட் சகோதரர்களை நன்றியோடு நினைத்துக் கொள்கிறார்கள்.

இந்த வாரம் விண்வெளிப் பயணத்தில் ஒரு புதிய யுகம் பிறந்தது. தனியார் விண்கப்பல் ஒன்று, காற்று மண்டலத்துக்கு அப்பால் விண்வெளிக்குப் பறந்து, மீண்டும் பூமியை வந்தடைந்தது. இந்த விண்கப்பலின் சக்தி 60 ஆயிரம் குதிரைவலு. விணவெளிக் கப்பலின் தயாரிப்புக்கு முதலீடு செய்த வள்ளல் போல்.ஜி. அலன் என்பவர். செலவு 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இந்த வண்கப்பல் பூமிக்கு மேலே 100 கி.மீ. (60 மைல் அல்லது 328 ஆயிரம் அடி) உயரத்தில் பறந்தது. அதற்கு எடுத்த நேரம் 1 நிமிடம். ஈர்பபு விசையிலிருந்து தப்பவேண்டும் என்றால், விண்கப்பல் ஒரு நொடிக்கு 7 மைல் அல்லது ஒரு மணிக்கு 25 ஆயிரம் மைல் வேகத்தில் பறக்க வேண்டும். பூமியின் ஈர்ப்பு விசை




சிங்கப்பூர் விமான நிலையம்

13 மல்லியன் மைல் உயரத்தில் இல்லாது போய்விடுகிறது. 'இப்போது விண் வெளி எல்லைக்குள் நுழைகிறீர்கள்' என்ற அறிவுப் பலகையை அந்த இடத்தில் மாட்டி வைக்கலாம்.

இனி என்ன விடுமுறையில் விண்வெளிக்கு ஒரு சுற்றுப் பயணம் செய்து திரும்பலாம். செலவு அதிகம் இல்லை. அமெரிக்க டொலர்கள் 20 மில்லியன் போதும்.

'பூ இதென்ன பெரிய கண்டு பிடிபபு? எங்களுடைய இராவணனிடம் இல்லாத விமானமா? அவன் சிவனைத் தரிசிக்க நாள்தோறும் கயிலை மலைக்கு புட்பக விமானத்தில்தானே போய் வந்தவன்! சீதையைக் கூட இந்த புட்பக விமானததில் தான் கடத்தி வந்தவன். கம்பர் தனது இராமாயணத்தில் இராவணனின் புட்பக விமானம் ஓடுபாதையில் கொஞ் சத்தூரம் ஓடிய பின்னர் தான் விண்ணில் கிளம்பியது என்று எழுதி வைத திருக்கிறார்.

'இப்போதுள்ள இயந்திரங்களை எல்லாம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய எங்கடை மூதாதையர் எப்போதோ கண்டு பிடித்துவிட்டார்கள். தொலைக காட்சி, தொலைபேசி, தொலைநோக்கி எல்லாம் அவர்கள் கண்டுபிடித்தது தான்.' இப்படி பழம் பெருமை பேசுகிறவர்களோடு தர்க்கம் செய்ய முடியாது, செய்தாலும் அவர்களை வெலல முடியாது.




ஆனையிறவு உப்பளம்

# தாயகம் நோக்கிய பயணத்தில்...

நான் பயணம் செய்த எயார் கனடா விமானம் எயார்பஸ் ஏ 380 ரகத்தைச் சார்ந்தது. சுமார் 555-850 இருக்கைகளைக் கொண்ட விமானம். எங்களுக்கு வால் பக்கம் இரண்டு வரிசை முன்பாக இருக்கை. ஒருவாறு பொதியை தூக்கியும் இழுத்தும் தலையிலிருந்து வால்வரை கொண்டு போயச் சேர்த்தோம்.

எயார் கனடா கொடுத்த **boaring pass** சை வாங்கிக்கொண்டு பாதுகாப்பு கண்காணிப்பு இடத்துக்குப் போனபோது, ஒரு சிறு திகைப்பு. சீருடையில் - வயதில் குறைந்த ஒரு பாதுகாப்பு அதிகாரி அங்கும் இங்கும் சுறு சுறுப்பாக நடந்து கொண்டிருந்தார்.

தலைமயிரை ஒட்டவெட்டி பார்ப்பதற்கு கயனீஸ் மாதிரி இருந்தார். இப்படி என் மனம் அவரை எடை போட்டுக் கொண்டிருந்தது.

'ஐயா! எங்கே போகிறீர்கள்? யாழ்ப்பாணமா?'

'ஆம் ஆம்!'

'நான் போன மாதந்தான் அங்கு போய் வந்தனனான்!'

இப்படி அவர் தமிழில் பேசிய போது எனக்கு ஒரே திகைப்பு! பரவாயில்லை, பியார்சன் விமானநிலையப் பாதுகாப்பு பிரிவுவரை எம்மவர்கள் உத்தியோகம் பார்க்கிறார்கள் என்று எனக்குள் நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டேன்.

கனேடிய தமிழர்கள் கைத்தொழில், வாணிபம், கல்வி, ஊடகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பம் என எல்லாத்துறைகளிலும் முன்னேறி, பிறந்த நாட்டுக்கும் புகுந்த நாட்டுக்கும் பெருமை தேடித் தரவேணடும். தனி மனிதர்கள் முன்னேறினால் சமூகம் முன்னேறும். சமூகம் முன்னேறினால் இனம் முன்னேறும்.

1998 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவில் 4 மாதம் தங்கிவிட்டு, புறப்பட்டு வரும்போது விமான நிலைய குடிவரவுப் பிரிவில் எனது கடவுச் சீட்டை சரி பார்த்து அனுப்பி வைத்தவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரு நடுத்தரவயதுப் பெண்மணி. சொந்த ஊர் நல்லூர் என்றார். பெயர் மறந்து போய்விட்டது.

சிங்கப்பூர் விமான நிலையத்தில் வித்தியாசமான அனுபவம். பெரிய பதவியில் யாரையும் காணோம். ஆனால், விமான நிலையத்தைக் கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருப்பவர்களில் 60-80 விழுக்காடு தமிழர்கள்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் பெப்ரவரி 22, 2002 ஆம் ஆண்டில் கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழீழத் துக்குப் படையெடுத்துப் போகிறார்கள்.

இப்போது இந்த படையெடுப்பின் வேகம் குறைந்து வருகிறது. இப்படிப் படையெடுப்பவர்கள் பல விதம்.

தங்கள் காணி-பூமி, வீடு-வாசல்கள் எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கப் போகிறவர்கள். நல்ல விலை வந்தால் அவற்றை விற்றுக் காசாக்க நினைப்பவர்கள்.

சண்டையில் செல்லடி, குண்டு வச்சு இவற்றால் உடைந்து உருக



மாவீரர் துயிலும் இல்லம்

குலைந்துபோன வீடுகளைக்காசு செலவழித்து திருத்தி அதை வாடகைக்குக் கொடுத்து அல்லது வீடில்லாத உறவினர்களை குடிவைப்பவர்கள்.

அடாத்தாக குடியேறி வசிப்பவர்களை வெளியேற்றி, வீட்டையும் காணியையும் கைவசப்படுத்த நினைப்பவர்கள்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டுக் கொண்ட வீட்டையும் (மிஞ்சி இருக்கும்பட்சத்தில்) காணியையும் பார்க்க எத்தனிப்பவர்கள்.

ஊர்க் கோயில்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்களைப் பார்க்க விரும்பும் முதியவர்கள்.

வன்னியில் எழுப்பப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள், செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை, நவம் அறிவுக்கூடம், மயூரி இல்லம், குருகுலம் போன்ற சிறுவர் இல்லங்கள், ஆனையிறவு, முகமாலை, குடாரப்பு, இயக்கச்சி, பளை, முல்லைத் தீவு போர்க்களங்கள் இவற்றை நேரில் பார்க்க விரும்புபவர்கள்.




முகமாலை சோதனை நிலையம்

நாங்கள் பயணம் புறப்பட்ட போது, வன்னியில் தட்டுப்பாட்டுப் பொருட்கள் எவை என்பதை நண்பர்கள் மூலம் தெரிந்துகொண்டு, அவற்றை எடுத்துச் சென்றோம். ஆனால், பலருக்கு எவற்றை எடுத்துப் போகலாம் என்பதையிட்டு ஒன்றுமே தெரியாது. வன்னியடைந்த பின்னரே அதைக்கொண்டு வந்திருக்க லாம், இதைக்கொண்டு வந்திருக்க லாம் தெரியாமல் போச்சே என அங்கலாய்க்கிறார்கள்.

எனவே வன்னிக்குப் போகிறவர்கள் என்னென்ன பொருட்கள் எடுத்துக் கொண்டு போனால், பயனுள்ளதாக இருக்கும் என்பதை தொடக்கத்திலேயே சொல்லிவிடுகிறேன்.

1) மருந்து வகைகள். குறிப்பாக அயோடின், பிளாஸ்டர், கையுறைகள் போன்றவை. கிளிநொச்சி மருத்துவமனை, டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை இரண்டிலும் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

2) சிறுவர் இல்லங்களில் வாழும் பிள்ளைகளுக்கு உடை, புத்தகங்கள், எழுது கருவிகள், விளையாட்டுப் பொருட்கள்.

3) கணினிகள், கணினிமென் பொருட்கள், புத்தகங்கள்.

பாதுகாப்பு ஊழியர்கள் சபபாத்து, சொக்ஸ் எல்லாவற்றையும் கழட்டச் சொன்னார்கள். உடம்பு முழுவதும் **metal detector** வைத்து துப்பரவாக சோதனை செய்தார்கள். யாரையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. கிழடு கட்டைகள், இளந்தாரிகள், குழந்தைகள் என்ற வித்தியாசம் பார்க்காமல் எல்லோரையும் கவனமாகப் பரிசோதித்தார்கள். துயிலுரியாத குறை.

சோதனை ஒருவாறு முடிந்து தப்பினோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து நகர்ந்து, விமானம் ஏறும் வாசலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டோம். அது சரியான வாசல் தானா என பக்கத்தில் இருந்தவரிடம் கேட்டு உறுதி செய்துகொண்டோம்.

சில சமயங்களில் வாசல்களை அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பார்கள். அதுதான் முன்னெச்சரிக்கைக்குக் காரணம். இது எவ்வளவு முக்கியம் என்பதை அடுத்த கிழமை சொல்வேன்.

விமானங்கள் ஒருபோதும் சொன்ன நேரத்துக்குக் கிளம்புவதில்லை. எயார் கனடா அதற்கு விதிவிலக்கல்ல. பிற்பகல் ஏழு மணிக்கு கிளம்ப வேண்டிய விமானம் ஏழரை, ஏழே முக்கால் ஆகியும் கிளம்பவில்லை.

வீட்டிலிருந்து கிளம்பி 4 மணித்தியாலங்கள் சென்று விட்டது. ரொறன்ரோவிலிருந்து லண்டன் போய்ச் சேரவே அரைநாள் போய் விடும்போல் இருந்தது. வேறு வழியில்லை. பொறுமையாக இருப்பதுதான் புததிசாலித்தனம் லண்டன் - கொழும்பு விமானத்தைப் பிடிக்க நேரம் இருந்தால் போதும்.

விமானி ஒலிபெருக்கியில் பயணிகளிடம் தாமதத்துக்கு அடிக்கடி ஆங்கிலம், பிரஞ்சு மொழிகள் இரண்டிலும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டே இருந்தார். விமானத்தில் ஏறவேண்டிய இரண்டு பயணிகளைக் காணவில்லையாம். அந்த இரண்டு பயணிகளுக்காகக் காத்திருப்பதாக விமானி கூறினார்.

# ஈராக்கில் 1.7 மெற்றிக் தொன் கதிரியக்கப்பொருட்கள் மீட்பு!

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்தமாதம் 1.7 மெற்றிக் தொன் கதிரியக்கப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மிகவும் இரகசியமான முறையில் நடத்தப்பட்ட இந்த நடவடிக்கை குறித்து அமெரிக்காவின் அணுசக்தி செயலர் ஸ்பென்சர் அப்ரகாம் தெரிவிக்கையில் - இந்த நடவடிக்கை மிகப்பெரியதொரு சாதனை எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், ஆபத்து மிக்க இந்த அணுசக்திப் பொருட்கள் பயங்கரவாதிகளின கைகளுக்குக் கிடைப்பது தவிர்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

1.77 மெற்றிக் தொன் யுரேனியம் மீட்கப்பட்டதாகவும் இதன்மூலம் ஆயிரம் வகையான கதிரியக்கப் பொருட்களை உருவாக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பொருட்கள் ஈராக்கின் முன்னைய அணு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கடந்த மாதம் 23 ஆம் திகதி மீட்கப்பட்டதாகவும், இதன் பின்னர் அமெரிக்காவின் அணுசக்தி திணைக்களத்திலிருந்து சென்ற ஆய்வுகூடப் பணியாளர்களால் இவை 20 பொதிகளாகப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பொதிகளாக்கப்பட்ட இவை அணுசக்தி திணைக்களத்தின் பாதுகாப்புடன் இராணுவ விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு இந்தத் திணைக்களத்தின் களஞ்சியத்தில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பொருட்கள் மீட்கப்பட்டது குறித்த தகவல் ஈராக்கில் இடைக்கால அரசு கையளிக்கும் நிகழ்வான கடந்த 28 ஆம் திகதி ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி அமைப்பு மற்றும் ஈராக்கிய அதிகாரிகளுக்கு அமெரிக்காவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.




# ஒஸ்ரிய ஜனாதிபதி மாரடைப்பால் மரணம்

(வியன்னா)

ஒஸ்ரிய ஜனாதிபதி தோமஸ் கிறெஸ்ரில் வியன்னாவிலுள்ள வைத்தியசாலையொன்றில் நேற்று முன்தினம் காலமானார்.

ஒஸ்ரிய தலைநகர் வியன்னாவில் உள்ள தனது வீட்டில் தங்கியிருந்தபோது அவருக்கு கடந்த திங்கட்கிழமை மாரடைப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அவரது பாதுகாவலர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர். ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்றுமுன்தினம மரணமானார்.



இவர் தனது ஆறுவருடங்களைக்கொண்ட பதவிக்காலத்தை முடிப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக மரணமாகியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தேர்தலில் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு சமூக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹெயின்ஸ் பியச்சர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

மரணமான ஜனாதிபதி கிறெஸ்ரில் 1992 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

## அதிசய குளிர்சாதனப் பெட்டி பானைகள்



போரினால் சீரழிந்த ஆப்கானிஸ்தான் இப்போது ஓரளவு பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது. கலை அம்சங்களுடன் ஃலங்கார பட்டுக் கம்பளங்கள், அழகிய மட்பாண்டங்கள் செய்வதில் ஆப்கானிஸ்தான் நாட்டவர்கள் வல்லவர்கள். காபூல் நகரில் மட்பாண்டங்களை தயாரிக்கும் ஒருவர் வித்தியாசமான மண் பானைகளை உருவாக்கிவருகிறார்.

மட்பாண்டத்தில் ஊற்றி வைக்கும் தண்ணீர் வழக்கமாக குளிர்ச்சியாக இருக்கும். என்றாலும் இவர் உருவாக்கும் இந்த மட்பாண்டத்தில உள்ள தண்ணீர் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கும் தண்ணீருக்கு இணையாக 'ஜில்' என்று குளிர்ச்சியாக இருக்கிறது. இந்த மட்பாண்டம் இப்போது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. ஒரு பானை 60 ரூபாய்க்கும் அதிகமாக விலைபோகிறது.

## ஜோர்ஜ் புஷ் படம் போட்ட டொலர் நோட்டுகள்

(வொஷிங்ரன்)

அமெரிக்காவின் சுதந்திர தினம் கடந்த 4 ஆம் திகதி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பல்வேறு நாடுகளில் வசிக்கும் அமெரிக்கர்களும் சுதந்திரதின விழாவைக் கொண்டாடினார்கள். கொண்டாட்டம் ஒருபக்கம் நடக்க, அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்திலும் வெளிநாடுகளில் வசிக்கும் அமெரிக்கர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அதிபர் ஜோர்ஷ் புஷ் படம் போட்ட போலி டொலர் நோட்டுக்களை அவரின் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி உலக வர்த்தகமையக் கட்டடம் இடிக்கப்பட்டதை குறிக்கும் வகையில் 9-11 என்ற எண இதில் இடம்பெற்றுள்ளது. ஜேர்மனியில் 10 ஆயிரம் அமெரிக்கர்கள் புதிதாகக் குடியேறியுள்ளனர்.



இவர்கள் தங்களுக்கு வெளிநாட்டு அமெரிக்கர்கள் பிரிவில் வாக்குரிமை வழங்கவேண்டும் என்று வற்புறுத்தி போராட்டம் நடத்திவருகிறார்கள்.

## ஒரே கேக் மீது 15 ஆயிரம் மெழுகுவர்த்திகள்



அமெரிக்காவின் நியூஹாம்ஷைர் மாகாணத்தில் கேக்மீது மெழுகுவர்த்தி ஏற்றிவைப்பதில் புதிய சாதனை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த மாகாணத்தில் உள்ள நகரின் ஆண்டு விழாவையொட்டி 40 அடி நீள ராட்சத கேக்கை உருவாக்கினார்கள்.

அதன்மீது 15 பேர், 15 ஆயிரம் மெழுகுவர்த்திகளை வைத்து ஏற்றினார்கள். இதற்கு முன் 12 ஆயிரம் மெழுகுவர்த்திகளை ஒரே கேக்கின் மீது ஏற்றியதுதான் உலக சாதனையாக இருந்தது. அந்த சாதனை இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

## அல்ஜீரியாவின் தலைநகரில் கடந்த மாதம் இடம்பெற்ற தாக்குதல் கார்க் குண்டுவெடிப்பென தெரிவிப்பு!



அல்ஜீரியாவில் கடந்த மாதம் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் கார் மூலம நடத்தப்பட்டதாக அல்ஜீரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி அல்ஜீரியாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 11 பொதுமக்கள் காயமடைந்ததுடன் அந்நாட்டின் பிரதம மின் வழங்கும் நிலையமும் சேதமடைந்திருந்தது. அல்ஜீரியாவின் பிரதான இஸ்லாமியக் குழுவான ஜி.எஸ்.பி.சி என்ற அமைப்பு தாமே இந்தக் கார்க் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்திருந்தது.

ஆனால், இந்தத் தாக்குதல் கார்க்குண்டு வெடிப்புத்தான் என்பது உறுதிபடுத்தப்படும் வரை அல்ஜீரிய அதிகாரிகள் இது ஒரு தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இடம் பெற்றதாகத் தெரிவித்துவந்தனர்.

இந்தத் தாக்குதல் மூலம் அல்ஜீரிய இஸ்லாமியக் குழுக்கள் தலைநகரிலுள்ள அரச தலைமையலுவலகத்தை தற்போதும் தாக்கமுடியுமென நிரூபித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் எதனை உணர்த்துகின்றது என்றால், தலைநகரின் கட்டுப்பாடு - பாதுகாப்பு அதிகாரிகளின் கைகளில் இல்லை என்பதையே காட்டுவதாக இந்தத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் இஸ்லாமிய போராளிக்குழு தெரிவித்தது.

# ஈராக்கில் கடத்தப்பட்ட அமெரிக்க கடற்படை வீரர் விடுதலை செய்யப்பட்டார்

ஈராக்கில் வைத்து கடந்தமாதம் கைதுசெய்யப்பட்ட அமெரிக்க கடற்படை வீரர் விடுதலை செய்யப்பட்டதாக அவரது சகோதரர் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட வசீவ் அலி ஹசினின் சகோதரரான சமி தெரிவிக்கையில் - தனது சகோதரர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

ஆனால், அவர் எங்குவைத்து விடுதலை செய்யப்பட்டார் என்பதனை அவர் தெரிவிக்கவில்லை. லெபனான் தலைநகர் திரிபோலியில் வைத்து சமி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் -

நாங்கள் தொலைபேசி அழைப்பொன்றைப் பெற்றோம். அதில் அலி ஹசன் உயிருடன் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டது.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள லெபனான் தூதரகமும், அமெரிக்க கடற்படை வீரர் உயிருடன் இருப்பதனை உறுதிசெய்துள்ளது.

ஆனாலும், இவர் தொடர்பான எந்தத் தகவலையும் உறுதிப்படுத்தமுடியவில்லையென அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை எகிப்து நாட்டைச் சேர்ந்த வாகனச் சாரதி ஒருவர் ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்டதாகத் தெரிவித்து அல் ஜசீரா தொலைக்காட்சி வீடியோ நாடா ஒன்றைப் பெற்றுள்ளது.

இந்த வீடியோ நாடா ஒளிபரப்பப்பட்டவேளை கடத்தப்பட்ட சாரதி அமர்ந்திருந்து தனது விபரத்தை வெளியிட்டார். அதன்போது தனது பெயர் அல் சாயிட் மொகமட் - அல் சாயிட் அல்ஹராபாவி எனத் தெரிவித்தார். இவரைச் சுற்றிவர முகமூடி அணிந்த ஆயுதம் தரித்தவர்கள் நின்றதாக எ.பி.செய்தி நிறுவனம் தெரிவித்தது.



ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரின் தேவைக்கென சவுதியிலிருந்து எரிபொருளை வாகனத்தில் கொண்டு வந்தவேளை ஈராக்கில் வைத்தே இந்தச் சாரதியைத் தாம் கடத்தியதாக இவரைக் கடத்தியவர்கள் அந்த ஒளிநாடாவில் தெரிவித்தனர்.

ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட அமெரிக்கக் கடற்படை வீரர் சிரச்சேதம் செய்யப்பட்டார் என முதலில் செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இறுக்கமான பாதுகாப்புக்காக ஈராக்கில் சட்டம் அறிமுகம்!

## பாதுகாப்பு சட்டத்தில் பிரதமர் அலாவி கைச்சாத்து



(பாக்தாத்)

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்வது உள்ளிட்ட கடுமையான பாதுகாப்பு நடைமுறைகளைக் கொண்ட பாதுகாப்புச் சட்டம் ஒன்றில் ஈராக்கிய இடைக்காலப் பிரதமர் இயாட் அலாவி கையெழுத்திட்டுள்ளார்.

இந்த விசேட பாதுகாப்புத் திட்டத்தில் பிரதமர் அலாவி கைச்சாத்திட்டுக்கொண்டிருந்த சமயத்தில் மத்திய பாக்தாத்திலுள்ள அலாவியின் அலுவலகத்திற்கு அருகிலேயே பல மோட்டார் ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன. இதில் குறைந்தது. ஆறு பொதுமக்கள் காயமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் புதிய சட்டம் - அரசாங்கத்துக்கு ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்தல், சோதனை நிலைகளை ஏற்படுத்துதல், மற்றும் சந்தேகநபர்களை விசாரணை செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தச் சட்டத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கே, குறிப்பாக நாட்டின் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் பயன்படுத்துவதற்கே அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கை கடுமையானதென்று பொதுமக்கள் கருதுவதோடு இது சிவில் உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இடைக்கால ஜனாதிபதி ஷேக காதி அல் யாவர் மற்றும் அதிகாரிகள் இந்தச் சட்டத்தில் கையெழுத்திட்டனர்.

இது தொடர்பாக ஈராக்கிய அரசாங்கம் மேலதிக விபரங்களை நேற்று மாலை வெளியிட்டது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிபபடைகள் - கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தச் சட்ட மூலம் சட்ட அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## நேபாளத்தில் தாக்குதல் படையினர் உட்பட 22 பேர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கல்யாண் பிரதேசத்தில் மா ஓ கிளர்ச்சியாளர்கள் அரச படையினர் மீது மேற்கொண்ட தாக்குதலில் 22 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரோந்துப் பணியில் ஈடுபட்ட அரச படைகள்மீது மா ஓ கிளர்ச்சியாளர்கள் கடந்த இரு தினங்களாகத் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

இந்தத் தாக்குதலில் 11 அரச படைகளும் 11 மா ஓ கிளர்ச்சியாளர்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோ·நல்கள் குறித்து மா



ஓ கிளர்ச்சியாளர்கள் எந்தவித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கொழும்பு குண்டு வெடிப்பு; ரவிராஜ் எம்.பி. சந்தேகம்!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு சென்றதாகக் கூறப்படும் பெண்ணை அங்கு வைத்து சோதனையிடாமல் - பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அங்கும் வாயிலில் வைத்து சோதனையிடாமல் உள்ளே கொண்டு சென்று சோதனையிட்ட போது தான் குண்டு வெடித்ததென தெரிவித்திருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு சென்றவரை அங்கு வைத்தே சோதனை செய்திருக்க முடியும். அங்கிருந்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்ற பெண்ணை பொலிஸ்நிலையத்தின் வழமையான முறைப்படி வாசலில் வைத்து அல்லது வாசலின் முன் பகுதியில் வைத்து வழமையாகச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்வது போல செய்திருக்கலாம்.

ஆனால், இந்தக் குண்டுவெடிப்பு பொலிஸ் நிலையத்திற்குள்ளே இடம்பெற்றிருக்கின்றது.

இதனைவிட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கும், கருணா குழுவினருக்குமிடையில் தொடர்பிருப்பதாக நேரடியாகவே ஊடகங்கள் மூலம் ஒத்துக்கொண்டுள்ளார். ஆனால், அரசாங்கத்தின் அறிக்கையின்படி டக்ளஸ் தேவானந்தாவிற்கும், பல சிறிய குழுக்களுக்குமிடையில், பலவிதமான பிரச்சினைகள் இருந்துள்ளன. அவற்றின் காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாமென தெரிவிக்கிறது.

இவற்றைவிட ஹிங்குராங்கொடவில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களுடன் பௌத்த விகாரையில் அண்மையில் பிடிப்பட்டதாகவும் அவர்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமின்றி பிணை வழங்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.

## கருணாவுடன் தொடர்புவைப்பதை எவராலுமே தடுத்துவிட முடியாது!

### டக்ளஸ் தேவானந்தா பேட்டி

(கொழும்பு)

கருணாவுடன் தொடர்பு வைத்திருப்பதை யாரும் தடுககமுடியாதென ஈ.பி.டி.பியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்றிரவு பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். இந்தப் பேட்டியில் அவர்மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்து வந்தது வழமையான ஒரு விடயமாகும். ஒருவர் ஜனநாயக வழிக்கு வரும்போது அவருக்கு உதவவேண்டியது கடப்பாடாகும்.

எனவே என்போன்ற ஜனநாயக வாதிகள் அந்த வகையில் தான் கருணாவிற்கு உதவுகின்றேன் தற்போதும் கருணாவுடன் தொலைபேசி வாயிலான தொடர்பை பேணிவருகிறேன்.

என்மீது கொலை முயற்சி நடைபெறும் என்பதை கருணா என்னுடன் ஏற்கனவே பேசினார். அத்துடன் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் பேசினார். அவருடன் நான் தொடர்புகொள்வதை யாரும் தடுக்க முடியாது.

சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறும், இனப்பிரச்சினைக்கு சரியானதொரு தீர்வை விரைவில் எட்டுமாறும் இச்சம்பவத்தின்பின்னர் நான் ஜனாதிபதிக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

என்னுடைய கருத்திலோ, செயறபாட்டிலோ எந்தவித மாற்றமுமில்லை என அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## கொள்ளுப்பிட்டி குண்டுவெடிப்பு சமாதான விரோத செயலல்ல!

### சுதந்திரக் கட்சி அறிக்கை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத்தாக்குதல் சம்பவம் சமாதானத்தை குழப்பும் செயல் அல்லவென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன விடுத்த இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இந்தத் தற்கொலைத் தாக்குதல் சம்பவம் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து நடத்தப்பட்டதாகும்.

அவரைக் கொலை செய்வதற்கு முயற்சிக்கும் ஏதோ ஓர் குழு எடுக்கும் முயற்சியே இதுவாகும். இதனை ஐக்கிய தேசிய கட்சி சமாதானத்தை குழப்பும் செயல் எனக்கூறி நாட்டை இக்கட்டான நிலைக்குள் தள்ளமுயற்சிக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாட்டில் சமாதானத்தை முன்னெடுப்பதில் உறுதியாக செயற்படுகிறது.

அதனைக் குழப்பும் வகையில் செயற்படுவோர் பற்றி நாம் அக்கறை கொள்ளப்போவதில்லை எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்ளுப்பிட்டி சம்பவம் ஆராய்ந்து வருகிறோம்

### கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் பீட்டா டிம்போளின் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் பாரதூரமான ஒன்றாக இருந்தபோதிலும் இது போர்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலா என்பது குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இந்தச் சம்பவம் குறித்து சமாதானச் செயலகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளோம். எனினும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எந்தவொரு கருத்துக்களும் வெளியிடப்படவில்லை.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து, பாதிக்கப்பட்டவர்களையும் பார்வையிட்டதுடன் தொடர்ந்தும் எமது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

விசாரணைகள் நிறைவுற்றதும் எமது முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## பல்கலை மாணவர்கள் இன்றுமுதல் பகிஷ்கரிப்பு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கிருஸ்ணபிள்ளை புஸ்பமாலாவின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி இன்றுமுதல் விரிவுரைகளை பகிஷ்கரிக்கப் போவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி நிர்வாகத்தினால் பழிவாங்கப்படுவதாகத் தெரிவித்தும், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுமுன்தினம் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இவரது நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், நிர்வாகத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் இன்றுமுதல் அனைத்து விரிவுரைகளையும் பகிஷ்கரிக்கப் போவதாக மாணவர் ஒன்றியம் அறிவித்துளளது. எனினும் நடைபெற்று வரும் அணைத்துப் பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கையை அடுத்து நேற்றிரவு மாணவி தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். மாணவியும் அவரது சகோதரனும் உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை மாணவியின் ஐந்து கோரிக்கைகளில் நான்கு கோரிக்கைகளுக்கு இணக்கம் காணப்பட்டபோதிலும் பரீட்சை விடைத்தாள்களை மீள் திருத்தம் செய்வதற்கு மருத்துவ பீடத்தின் பீடாதிபதி மற்றும் துறைத்தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன் வினாத்தாள்கள் மீள் பரிசீலணை செய்யப்படுமானால் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதேவேளை மாணவியின் மூன்று பாடவினாக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக துணைவேந்தர் மாணவிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உண்ணாவிரதமிருந்த மருத்துவ பீட மாணவியின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது-

மாணவியின் கோரிக்கைகள் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவாக அவற்றிற்கான நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளோம்.

அவர் ஏற்கனவே எழுதிய பரீட்சை விடைத்தாள்களை பிறிதொரு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பித் திருத்துவது எனவும் அதன்படி அவர் சித்தி எய்தத் தவறினால் மீண்டும் ஓர்தடவை பரீட்சை எழுத அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் கோரும் நஷ்ட ஈடு எம்மால் வழங்கப்படமாட்டாது. நாம் யாரையும் வஞ்சிப்பதில்லை. அவர் விரும்பினால் அவரையும் வேறு பல்கலைக்கழகத்தில் அவரது கற்கையைத் தொடர அனுமதிக்க முடியும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்கவே நாம் அவரை தற்போது மாணவியாக ஏற்கவும் மீண்டும் ஓர் பரீட்சைக்கு அனுமதிக்வும் தீர்மானித்துள்ளோம்.

அவர் நூலகத்தையோ பரிசோதனைக்கூடத்தையோ பயன்படுத்த நாம் அனுமதித்துள்ளோம். அவர் தன்னை முழுமையாகத் தயார் படுத்தி பரீட்சைக்கு தோற்றமுடியும் என்றார். (ப),(46)

## கொள்ளுப்பிட்டியில் குண்டு...

ளிடம் கொடுத்தார். இதையடுத்து அமைச்சரைச் சந்திப்பதற்கு முன்னர் இப்பெண்ணை அங்கிருந்த பெண் பொலிஸார் ஒருவர் சோதனையிட்ட போது - உடலில் கடினமான பொருள் இருப்பதை உணர்ந்தார். இதனால் சந்தேகமுற்ற பெண் பொலிஸார் அப்பெண்ணிடம் ஆடையைக் களையுமாறு கேட்டார். அதற்கு அவர் மறுப்புத் தெரவித்தார்.

இதையடுத்து பெண்பொலிஸார் தனது மேலதிகாரியான - அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட அதிகாரியிடம் இதுகுறித்து முறையிட்டார்.

அவர் அப்பெண்ணிடம், உடைகளைக் களைந்து பெண்பொலிஸ் அதிகாரி சோதனையிட அனுமதிக்குமாறு கேட்டார். இதனால் கோபமுற்ற அப்பெண் சத்தமிட்டு தான் பொலிஸாரிடம் முறையிடப்போவதாக அச்சுறுத்தினார். இதனையடுத்து பெண் பொலிஸாரும், அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியும் அப்பெணணைத் தம்முடன் அழைத்துச் சென்றனர். ஆனால் அவரை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்வதாக அப்பெண்ணிடம் கூறவில்லை.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அப்பெண்ணை அங்கிருந்த இன்னொரு பெண் பொலிஸார் சோதனையிட முயன்ற அதேவேளை இன்னொரு பொலிஸ் அதிகாரி குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு தொலைபேசி மூலம் அறிவித்தார்.

இதன் போது நேற்று நண்பகல் 12.16 மணியளவில் பொலிஸ் நிலையத்திற்குள் பாரிய குண்டு வெடிப்பு இடம்பெற்றது. குறித்த பெண் உடலில் கட்டியிருந்த குண்டை வெடிகக வைத்ததாலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் நான்கு பொலிஸ் அதிகாரிகளும், குண்டுடன் வந்தாகக் கூறப்படும் பெண்ணும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஈ.எம்.பி.எக்கநாயக்கவும் மேலும் இரண்டு பொலிஸ் சார்ஜன்டுகளும ஒரு கொன்ஸ்டபிளும் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

காயமமைடந்தோரில் மூன்று பெண் பொலிஸார் உட்பட எட்டு பொலிஸாரும் பொலிஸ் நிலையத்தல் முறைப்பாடு செய்யவந்த இரணடு பொதுமக்களும் அடங்குகின்றனர்.

இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தால் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையம் பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகத் தெரியவருகிறது.

ஈ.பி.டி.பி செயலாளரும் கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்தே இந்தக் குண்டு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

### இராணுவத்தின் நிழல்...

எரிக்சொல்ஹெய்ம் பேச்சுக்களை நடத்தினார்.

லண்டனில் உள்ள தனது இல்லத்தில் நடந்த சந்திப்பின போதே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்த விசனத்தைத் தெரிவித்தார்.

மேலும், கருணா விவகாரம் மற்றும் மட்டக்களப்புச் சம்பவங்களில் இராணுவ புலனாய்வுத் துறையினர் யுத்த நிறுத்த மீறல்களை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் தெரிவித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம், இராணுவப் புலனாய்வுதுறையின் இந்த நிழல் யுத்தம் குறித்து எரிக் சொல்ஹெய்மிடம் கடும் ஆட்சேபத்தினைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது சமகால அரசியல் நிகழ்வுகள், சமாதான முயற்சிகளின் நிலவரம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

### கொழும்பு குண்டு வெடிப்பு...

விடுதலைப் புலிகள் கடைப் பிடித்து வந்திருக்கின்றனர் என்பதை பெரியளவில் அவர்கள் மீறவில்லை என்று என்னால் சொல்லமுடியும். அரசும் அதேவிதமாக செயற்பட்டது.

இந்த ஒரு நிகழ்வினால் சமாதான முயற்சிகள் எவ்வகையிலும் பின்னடையும் என நான் நினைக்கவில்லை. ஒன்றிரண்டு நிகழ்வினால் சமாதான முயற்சி பின்னடைந்து செல்வதற்கு இடம் வழங்கமுடியாது. இந்த விடயம் எவ்வாறு எங்கு நடந்தது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுகுறித்து விடுதலைப் புலிகளிடம் நோர்வே தூதுவர் கேட்டுள்ளார். இந்த நிகழ்வை தாம் செய்யவில்லை என புலிகள் மறுத்துள்ளனர்.

இதுகுறித்து உண்மையா பொய்யா என கண்டறிய நாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். நாங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவோம் அதனை மீறமாட்டோம். என விடுதலைப் புலிகள் இந்த நிகழ்வுக்கு பிறகும் தெரிவித்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### டக்ளஸ் தேவானந்தா....

தாவை இலக்குவைத்தே மேற்படி குண்டுதாரி வந்துள்ளார். பொதுமக்களைத் தாக்குவது இவரது இலக்காக இருக்கவில்லை என ஆரம்ப விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் பொலிஸார் இணைந்து நேற்றுமுதல் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

## கொழும்பின் பாதுகாப்பை...

லாவது தற்கொலை தாக்குதல் சம்பவம் இதுவாகும். இது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என உறுதிப்படுத்தப்படுமானால் இது ஒரு பாரதூரமான யுத்தநிறுத்த மீறலாக கருதப்படும்.

ஆனால் இந்த தாக்குதலின் சரியான நோக்கம் என்னவென இப்போது எம்மால் கூறிவிடமுடியாது. எனினும் இது குறித்து இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமாகவே கருதப்படுகிறது என தெரிவித்தார்.

இதேவேளை,

குண்டுவெடிப்பு சம்பவம் குறித்த விசாரணைகள் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன் குண்டுதாரி தங்கியிருந்த இடத்தை கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழு ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் விழிப்புடன் இருந்ததால் நிகழவிருந்த பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய முறையில்...

வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் டெனிம் துணியால் செய்யப்பட்டிருந்தன.

இந்த குண்டு இலகுவில் கண்டுபிடிக்கமுடியாதவாறு நைலோன் துணியால் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் குறைந்தளவு வெடிபொருளே வைக்கப்பட்டிருந்தது.

இதனால்தான் குறிப்பிட்ட பெண்ணின் உடல்பாகங்கள் எஞ்சியுள்ளன.

இடுப்பின் கீழ் சில பாகங்கள் சேதமடையாமல் உள்ளன.

இதிலிருந்தே இந்தப் பெண் அணிந்திருந்த தற்கொலை தாக்குதல் அங்கியில் அதிகளவிலான வெடிபொருட்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது புலனாகிறது.

என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.